# தமிழரசு

1-12-1993 ரூ.3






பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைக்ள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


வரலாற்றுச் சிறப்புமிக்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டம் ... 2

தமிழகத்தின் உயிர்மூச்சான இடஒதுக்கீடு முறை தொடர அரசியல் சட்டத் திருத்தம் வேண்டும்! மாண்புமிகு முதல்வர் உரை ... 5

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ... 9

முதலமைச்சர் பொது நிவாரண நிதி குவிகிறது! ... 12

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி! ... 14

படமும் — செய்தியும் ... 15

மன்னர் திருமலை ... 19

வீரத் தமிழர் விளையாட்டு ... 24

ஆட்சித் தமிழுக்கு அழகு சேர்க்கும் மதுரை ... 27

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் ... 29

அறிவொளி இயக்கம் ... 31

நீலகிரி நிலச்சரிவு: மத்திய நிபுணர்கள் பார்வையிட்டனர் ... 33

கூட்டுறவுக் குடையின்கீழ் ஒரு குதூகலப் பயணம்! ... 35

பாரதியும் பாப்பாப் பாட்டும் ... 41

குறளின் குரல் ... 44

பொது வேலை நிறுத்தம் ... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

கார்த்திகைத் திங்கள் - 16

மலர்:24 இதழ்:11

1-12-1993

விலை: ரூ.3

அட்டை சொல்லும் செய்தி:






## தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 69% இடஒதுக்கீடு பற்றிய பிரச்சினை குறித்து...

# வரலாற்றுச் சிறப்பு மிக்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டம்

தலைமைச் செயலகத்தில் 26.11.1993 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய கூட்டம் மாலை 2.30 மணிக்குத் தொடங்கி இரவு 7.30 மணி வரை, 5 மணி நேரம் தொடர்ச்சியாக நடந்தது.


இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இட ஒதுக்கீடு சம்பந்தமாக எடுத்த மற்றும் எடுக்கவுள்ள நடவடிக்கைகளுக்குத் தங்களுடைய முழுமனதான ஆதரவைத் தெரிவிப்பதாகக் கூறி, மாண்புமிகு தமிழக முதல்வரை மனந்திறந்து பாராட்டினார்கள்.

கூட்டத்தின் இறுதியில் ஒரு



தீர்மானம் முழுமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தைத் தலைமைச் செயலாளர் அவர்கள் வாசித்து முடித்ததும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தத் தீர்மானத்திற்கு உங்களுடைய முழு ஆதரவு உள்ளதா? எனத்தலைவர்களைப் பார்த்துக் கேட்டபொழுது, அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி தீர்மானத்திற்கு அவர்களுடைய முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

கூட்ட முடிவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.


MGR ADMK
D.M.K
C.P.I.M
J.D
P.M.K
D.K
LOK DAL. B
P. NEDUMARAN



# தமிழகத்தின் உயிர்மூச்சான இடஒதுக்கீடு முறை தொடர அரசியல் சட்டத் திருத்தம் வேண்டும்

## மாண்புமிகு முதல்வர் உரை

**மா**ண்புமிகு அமைச்சர் பெரு மக்களே!

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு, வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகம் எதிர்கொண்டுள்ள ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தீர்வு காண வேண்டிய ஒரு கால கட்டத்தில், நாம் அனைவரும் இங்கே கூடி உள்ளோம். பல்வேறு கால கட்டங்களில் எழுந்த, நெருடலான பிரச்சினைகளை எல்லாம், எளிதாகச் சமாளித்து, தீர்வு கண்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அதே அடிப்படையில் இன்று, தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தமிழக மக்களின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், தொடர்ந்து வழி கோலுகின்ற வகையில், தொடர்ந்து செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள்ளை ஆராய்வதற்காக, நாம் இங்கே கூடி உள்ளோம். இந்திய உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழகத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறைய்யை, செயல்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை எழுந்தவுடன், தமிழக அரசு விரைந்து செயல்பட்டு, உச்ச நீதி மன்றத்தில் ஒரு தெளிவாக்க மனுவினையும், மறு ஆய்வு மனுவினையும், தாக்கல் செய்தது. இந்த இரண்டு மனுக்களும் உச்ச நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

*9.11.1993* அன்று தமிழகச் சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. சட்டப் பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும், ஒரு மனதாகக் கூடி, தமிழகத்தின் உயிர் மூச்சான இட ஒதுக்கீட்டு முறை தொடர, அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று, மத்திய அரசை வலியுறுத்தி, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் என்னால், பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, அனுப்பி வைக்கப்பட்டது. தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், *16.11.1993* அன்று, மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து அரசியல் கட்சிகள், மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன், பொது வேலை நிறுத்தம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தமிழக மக்களின் நலன் கருதும், எந்த ஒரு அரசியல் கட்சியும், இந்த இட ஒதுக்கீட்டு முறை, தமிழகத்தில் தொடர வேண்டும் என்பதில், மாற்றுக் கருத்து வைத்திருக்காது என்று தீர்க்கமாக நம்புகிறேன்.

இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரை, தமிழ்நாடு தான் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும், மற்ற மாநிலங்களுக்கு விளங்கி வருகிறது என்பதில், இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, *1921*-ஆம் ஆண்டு, ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற லட்சியம், முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் பெற்றது. அந்த ஆண்டு வெளியிடப்பட்ட முதல் Communal G.O., அதாவது, First Communal Government Order தான், பிற்படுத்தப்பட்ட மக்களின் முதல் உரிமைச் சாசனம் ஆகும். பின்னர் 1927-ஆம் ஆண்டு, அந்தந்த இனங்களின் மக்கள் தொகை அடிப்படையில், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும், என்ற கோரிக்கையை ஏற்று, ஒரு புதிய இட ஒதுக்கீட்டு முறை சீர்திருத்தத்தின், ஒரு புதிய திருப்புமுனை, 1951-ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன்று நடைமுறையில் இருந்த ஒதுக்கீட்டு முறை, அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி, செல்லத்தக்கது அல்ல என, உச்ச நீதி மன்றம் தீர்ப்பு அளித்த போது, தமிழகம் முழுவதும் தந்தை பெரியாரின் தலைமையில், ஓரணியாகத்திரண்டது. அன்று தமிழகத்தின் தலைவர்கள் அனைவரும், இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்தாவிட்டால், தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு, முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும், என்ற உணர்வினை வெளிப்படுத்தினார்கள். தமிழகத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளுக்கு, செவி சாய்த்த அன்றைய பாரதப் பிரதமர், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், முதல் அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொண்டு, இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட, இட ஒதுக்கீட்டு முறையில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 15 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றும், மொத்தம் 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்

பட்டது. பொதுத் தொகுப்பிற்கு 60 சதவிகிதம் வழங்கப்பட்டது. பின்னர் 1954, 1971, மற்றும் 1980-ஆம் ஆண்டுகளில், இட ஒதுக்கீட்டு முறை திருத்தி அமைக்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகிதம் என, 68 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்தி, இட ஒதுக்கீட்டை 50 சதவிகிதத்திற்கு அதிகமாக உயர்த்தினார். 1990-ஆம் ஆண்டு, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு என ஒரு சதவிகிதம் ஒதுக்கப்பட்டு, மொத்த இட ஒதுக்கீடு, 69 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு, இன்று வரை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில், 16.11.1992 அன்று உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய, அரசியல் சட்டப் பெஞ்ச், Nine Judges Constitutional Bench, மொத்த இட ஒதுக்கீடுகள், 50 சதவிகித உச்ச வரம்பை மீறாத வகையில், அமைத்துக்கொள்ள வேண்டும் என்று, தீர்ப்பளித்தது. 7.1.1993 அன்று நடைபெற்ற, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில், இந்திய உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பினால், எழுந்துள்ள விளைவுகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டன.

அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, 22.3.1993 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தில், மறு ஆய்வு மனு, Review Petition ஒன்று தாக்கல் செய்யப்பட்டது மட்டும் இன்றி, 23.4.1993 அன்று, தெளிவாக்க மனு, Clarificatory Petition ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், நாம் எடுத்த இந்த முயற்சிகளில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை தொடர சாதகமான பயன்கள் கிடைக்கவில்லை.

கல்வி நிறுவனங்களில் அனுமதி கொடுக்கும் பிரச்சினையை, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுப்பியது. 26.7.1993 அன்று வெளியிட்ட தீர்ப்பில், சென்னை உயர் நீதிமன்றம், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்குக் குறைக்க, உச்ச நீதிமன்றம், காலக்கெடு எதையும் நிர்ணயிக்கவில்லை; எனவே நடப்பு ஆண்டில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பின்பற்றி வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம்;

1994-95-ஆம் ஆண்டிலிருந்து, இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதமாகக் குறைத்துப் பின்பற்ற வேண்டும், என்று தெளிவாக்கியது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் தனி அனுமதி மனு, Special Leave Petition ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. பிற்படுத்தப்பட்ட மக்களின், தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தற்பொழுது உள்ள இட ஒதுக்கீட்டு முறை, என்றென்றைக்கும் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும், என்ற நமது கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில், தனி அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனு நிலுவையில் உள்ளது.

உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசின் கொள்கையை விளக்கி, தற்பொழுது இட ஒதுக்கீட்டை, உறுதி செய்வதற்காக, Thiru Kapil Sibal, Thiru Soli Sorabjee, ஆகிய புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்குகள் அனைத்தும், உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில், இருந்து வருகின்றன.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த, இன்றைய மத்திய அரசு, 25.9.1991 அன்று முன் வந்த போதே, 30.9.1991 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ''...... மண்டல் குழுவவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக,

50 சதவிகிதம் என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், இந்தச் சட்டப்பேரவை, மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது'', என்ற தீர்மானத்தை, நான் முன் மொழிந்தேன். அந்தத் தீர்மானம், ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நான் மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைத்து, வேண்டுகோளும் வைத்து, வேண்டுகோளும் விடுத்திருந்தேன்.

10.4.1992 அன்று, புது டெல்லியில், மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச், செயல்படுத்துவது தொடர்பாக நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், நமது மாநிலத்தின்இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வலியுறுத்திச் சொல்லப்பட்டது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளில் ஒன்றை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும், பணிகளுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்தே, உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன எனவே, உச்ச நீதிமன்றத்தில் நீதி மன்றத்தின் தீர்ப்பு அரசுப் பணிகளுக்கு மட்டும் பொருந்துமே அல்லாமல், கல்வி நிலையங்களில் அனுமதிக்குப் பொருந்தாது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், ஆகியோருக்கான இட



**நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.**

**— அண்ணல் அம்பேத்கர்**

## ஒப்பிலா மணி!



தமிழ்நாட்டில் ஒப்பிலாமணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் ராஜாஜி.

சமுதாயத் துறையில்... மாபெரும் சீர்திருத்தம் செய்த பெருமை ராஜாஜிக்குத்தான் உண்டு.

உற்சாகம் காரணமாகத் தனிப்பட்ட முறையில் சமுதாயத் தொண்டில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த என்னை, முழுக்க முழுக்கச் சமுதாயத் தொண்டனாக ஆக்கிய பெருமை ராஜாஜி அவர்களுக்கே உரியதாகும்.

— தந்தை பெரியார்

---

ஒதுக்கீட்டுப் பிரச்சினை, உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்பட்டதெல்லாம், பிற்படுத்தப்பட்டோருக்கு, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மட்டுமே தான். இந்திய அரசியல் சட்டத்தின் 15(4) என்ற உட்பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்வதற்கு, வழி வகை செய்கிறது. அதைப்போலவே, 16(4) என்ற உட்பிரிவு, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்வதற்கு, வகை செய்துள்ளது.

இந்த நிலையில், 50 சதவிகித உச்ச வரம்பை விதித்துள்ள, உச்ச நீதிமன்றம், இந்த 50 சதவிகித உச்ச வரம்பிற்குள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான, இட ஒதுக்கீடும் அடங்குமா, என்ற அடிப்படைப் பிரச்சினையையும் தெளிவு படுத்த வேண்டி உள்ளது.

நடைமுறையில் இருந்து வரும், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்கு மிகாத வகையில், அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது, இந்திய அரசியல் சட்டத்தில், சொல்லப்படாத ஒன்று மட்டுமல்ல; மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கு மாறானதும் கூட.

இந்திய நாட்டில், பிற்படுத்தப்பட்ட மக்களின் மொத்த ஜனத்தொகை, 52 சதவிகிதம் என்று, மண்டல் கமிஷன் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, 52 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு, நியாயம் இருந்தும், சட்டப் பிரச்சினை காரணமாக, 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு, மண்டல் கமிஷன் பரிந்துரை செய்வதாக, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது இதற்கு அடுத்த பரிந்துரையிலேயே, மண்டல் கமிஷன் அறிக்கையில், “States which have already introduced reservation for Backward Classes, exceeding 27% will remain unaffected by this recommendation” என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

50 சதவிகிதத்திற்கு அதிகமாக, இட ஒதுக்கீடு செய்வது மண்டல் கமிஷன் பரிந்துரைகளோடு, ஒத்துப் போகக் கூடிய ஒன்றாகும்.

இந்த இடத்தில், உச்ச நீதிமன்றத்தின் Kerala Vs N.M. Thomas, என்ற புகழ் பெற்ற வழக்கில், Justice Thiru Fazal Ali வழங்கிய தீர்ப்பின் ஒரு பகுதியை, நினைவுகூர்வது பொருத்தம் உடையதாக இருக்கும், என்று கருதுகிறேன்.

“Decided cases of this Court have no doubt laid down that the percentage of reservation should not exceed 50%. As I read the authorities, this is however a rule of caution and does not exhaust all categories. Suppose for instance, a State has a large number of backward classes of citizens which constitute 80% of the population, and the Government, in order to give them proper representation, reserve 80% of the jobs for them, can it be said that the percentage of reservation is bad and violates the permissible limits of Clause (4) of Article 16. The answer must necessarily be in the negative. The dominant object of this provision is to take steps to make inadequate representation adequate”. என்று, Thiru Fazal Ali அவர்கள், தனது தீர்ப்பில் குறிப்பிட்டு உள்ளார்கள். எனவே, தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும், இட ஒதுக்கீடு, இந்திய அரசியல் சட்டத்திற்கோ, அல்லது மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கோ, முரணானது ஆகாது என்பதனைச், சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த நிலையிலும், 69 சதவிகித இட் ஒதுக்கீட்டைத், தொடர்ந்திட வேண்டும் என்பது தான், இந்த அரசின் உறுதியான கருத்தாகும்.

அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது, மத்திய அரசின் பொறுப்பாகும். மக்களின் உணர்வை ஏற்று, சமுதாயத்தில், பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு, வழி வகை செய்யும் சட்டத் திருத்தத்தை, மத்திய அரசு விரைவில் கொண்டு வருவது தான், பொருத்தமானதாக இருக்கும். ஆனால், இதை உடனடியாகச் செய்ய இயலாது, என்கிற கருத்தும், எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே மேற்கொண்டுள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டும். அதில் எந்த விதமான ஐயப்பாடோ, தாமதமோ இருக்கக் கூடாது. இதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், திருத்தம் கொண்டு வர, காலத் தாமதம் நேரிடலாம் என்கிற சூழ்நிலையில், தமிழ்நாடு சட்டப் பேரவையே, இந்திய அரசியல் சட்டத்தின் 31(சி) பிரிவுப்படி, நமது மாநிலத்திற்கேற்ப, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத், தனிச் சட்டமாக்கி, அதற்கு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, நடைமுறைப்படுத்தலாம் என்கிற் கருத்தும், அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர், திரு கி.வீரமணி அவர்கள் கருத்தினை அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறு இந்திய அரசியல் சட்டத்தின் 31(சி)



## பிற்பட்ட மக்களின் உரிமை காப்போம்!

தமிழ்நாட்டில் பெரும்பான்மை யாக வாழும், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமூக முன்னேற்றம் கருதி, பொருளாதார நலம் கருதி, அவர்களுக்குத் தொடர்ந்து, தேவை யான அளவிற்கு இட ஒதுக்கீடு செய்வது, தமிழ்நாடு அரசின் தலையாய கடமையாக அமைந் துள்ள இந்த நேரத்தில், இதற்காகத் தேவைப்பட்டால், அன்று பண்டித ஜவகர்லால் நேரு குறிப்பிட்ட தைப் போல், இந்திய அரசியல் சட்டத் தில், தகுந்த திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்றால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தான் இருக்கும். நமக்கு நீதிமன்றங் களைப் புறக்கணிக்கும் எண்ணம், கிஞ்சித்தும் இல்லை. பிற்படுத்தப் பட்ட மக்களின் உரிமைகளைத் தெளிவுபடுத்தி, அவற்றைப் பாது காப்பதும், அவற்றை நிறைவேற்ற, எல்லாவித நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதும்தான், இப்போது நம்மிடையே இருக்கக் கூடிய, தலையாய பொறுப்பாகும். அன்று 'கம்யூனல் ஜி.ஒ.'-வைப் பாதுகாக்க, எப்படி அரசியல் சட்டத்திலே, முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப் பட்டதோ- அதே நடவடிக்கை, இன்றும் எடுக்கப்பட்டாக வேண்டும்.

"In a democracy, neither the Constitution nor the Government is Supreme; it is the people who are Supreme and they have the right to change the Constitution partially or completely...

**(9.11.93 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர்)**

பிரிவின் கீழ் தமிழக அரசு சட்ட மன்றத்தில் நிறைவேற்றும் தனிச் சட்டத்திற்கு, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்ன ரும் கூட, தக்க பாதுகாப்பு கிடைக் குமா என்பதில் சில அரசியல் சட்ட நிபுணர்கள் ஐயம் தெரிவித்து உள்ள நிலையில்,

அரசியல் சட்டத்தின் 31(பி) பிரிவின்படி, சட்டமன்றத்தில் தனிச் சட்டம் நிறைவேற்றுவது பற்றியும் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. அவ்வாறு 31(பி) பிரிவின்படி நாம் நிறைவேற்றும் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் (9th Schedule)-இல் இணைக்கப்பட, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டே ஆக வேண்டும். எது எப்படி இருப்பினும் எங்களைப் பொருத்தவரை, 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தொடர வேண் டும். நம்முடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட, தமிழக அரசு, நான் தெரிவித்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளது.

**இதற்கென ஒரு சட்டத்தைத் தமிழ்நாடு சட்டப் பேரவையில், அறிமுகம் செய்து, அதை நிறைவேற் றித் தரவும், தமிழக அரசு தயங் காது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.** இதனைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு எல்லாம் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பினையும் வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்காகவே அனைத்துக் கட்சியினரின் இக்கூட்டம் கூட்டப் பட்டுள்ளது. தமிழக மக்களின், மேம்பாட்டினையும், வளர்ச்சியினை யும், தமிழக மக்களின், மேம்பாட்டினையும், வளர்ச்சியினை யும், தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும், தமிழக அரசின் அசைக்க முடியாத எண்ணங்களை யும் கருத்தில் கொண்டு, அனைத்துக் கட்சித் தலைவர்களும், 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தக்க வகையில், தங்களது மேலான கருத் துக்களை வழங்கிட, மிகவும் அன் புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### மாண்புமிகு முதல்வர் அவர்களின் நிறைவுரை

மாண்புமிகு அமைச்சர்களே!

அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தீர்வு காண தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்துக் களோடு எப்படியேனும் 69 சத விகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தவும், சட்ட ரீதியான பாதுகாப்பை அளிக்கவும் எடுக்கப்படவேண்டிய நடவடிக் கைகள் குறித்து மிகத் தெளிவாக வும், சிறப்பாகவும் எடுத்துரைத் தார்கள். சிறந்த கருத்துகளை வழங் கிய உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தமிழக முதலமைச்சர் என்கின்ற முறையில் தமிழக மக்கள் அனைவரின் சார் பிலும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தமிழகத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தமிழக மக்கள் தொடர்ந்து சம நீதி பெறவேண்டும் என்பதற்கும், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்த எங்கள் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற் கொள்ளும் என்று உறுதி கூறு கிறேன். எங்களது முயற்சிகளுக்கு உங்களது ஆதரவையும், ஒத்துழைப் பையும் நீங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மீண்டும் இந்த மன்றத்தில் நல்ல கருத்துக் களை வழங்கிய உங்கள் அனைவருக் கும் நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.**

# இடஒதுக்கீட்டுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுத்தர மைய அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்

## அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

**26.11.1993 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:**

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும், பல்லாண்டுகளாக அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களின் அனுமதியிலும், இட ஒதுக்கீடு செய்யும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொருத்தவரை, தமிழ்நாடு இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டு முறைக்குப் பல கால கட்டங்களில், இடையூறுகள் ஏற்பட்டபோதிலும், அவை எல்லாம் சமாளிக்கப்பட்டு இன்று வரை இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து, தமிழ்நாட்டில் அமல் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் சமூக பொருளாதாரக் கல்வி நிலைகளில், தொய்வில்லாத தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட, தற்போது தமிழ்நாட்டில், அமலில் உள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய அவசிய சூழ்நிலை இருந்து வருகிறது.

இந்திய உச்ச நீதி மன்ற ஆணையின்படி, இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் இடையூறு ஏற்பட்டபோது, தமிழ்நாட்டின் பெருவாரியான மக்களின் நலன் கருதி தொடர்ந்து 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, நடைமுறைப் படுத்தப்படுத்த வேண்டும் என்ற ஒட்டுமொத்த உணர்வினை, அனைத்துத் தரப்புத் தமிழக மக்களும் வெளிப்படுத்தினார்கள்.

இப்பொழுது நிலவுகின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு எந்தவிதமான தடையும் இன்றி, எப்பொழுதும் போல் இனி வருங்காலத்திலும், 69 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்ந்து அமலில் இருக்கத்தக்க வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் விரைவில் கொண்டுவரப்பட வேண்டும் என்று, 9.11.1993 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தனித்தன்மை வாய்ந்த சிறப்புக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் முன்மொழியப் பெற்று, அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேராதரவோடு, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்று தீர்மானத்தை, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இந்தக் கூட்டம் ஒரு மனதாக வரவேற்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் மொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அந்த

வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்திற்கு விரைந்து செயல் வடிவம் கொடுத்திட மத்திய அரசு முன் வர வேண்டும் என்று, இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

மண்டல் கமிஷன் வழக்குகளில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக எழுந்துள்ள விளைவுகளிலிருந்து, தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டினை, எந்த விதத் தொய்வும் இன்றித் தொடர்ந்து கடைப்பிடிக்கவும், பேணிக்காக்கவும், தமிழ்நாடு அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், இதுவரை மேற்கொண்டுள்ள அனைத்து முயற்சிகளையும், எடுத்துள்ள நடவடிக்கைகளையும், இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்ககங்களின் தலைவர்கள் அடங்கிய இக் கூட்டம் வரவேற்று மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் ஆணையை மதிக்கவேண்டும் என்று விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகளும், மற்றும் சமுதாய இயக்கங்களும் அதே நேரத்தில் இட ஒதுக்கீடு முறை தொடரவேண்டும் என்பதிலும், தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சமூக பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதிலும் தீவிரமாக உள்ளன. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தவும், அந்தக் கொள்கையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இந்திய அரசியல் சட்டத்தில் தக்க திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், அல்லது இந்திய அரசியல் சட்டத்தின் 31(பி) பிரிவு அல்லது '31(சி) பிரிவின் கீழ் மாநில அரசு தனிச் சட்டம் ஒன்றை இயற்றி, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்றும், அதனைத் தொடர்ந்து சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுத்தர மைய அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்றும், இந்த வகையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொய்வின்றி மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தேவையான எல்லா முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும், அனைத்து அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், மண்டல் கமிஷன் சம்பந்தப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் ஆகியோருடைய பதவி உயர்வு போன்றவற்றில், தீர்ப்பில் உள்ள மற்ற பாதகமான பகுதிகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து, தகுந்த பாதுகாப்பு தரும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் உயிர்மூச்சுப் பிரச்சினையான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, மாண்புமிகு தமிழக முதல்வரும், தமிழக அரசும் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும், தங்களது மனமார்ந்த ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குவது எனவும் இந்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இக் கூட்டம் ஏகமனதாக முடிவு செய்கிறது.

## 26.11.93 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

டாக்டர் எம்.எஸ். சந்திரபோஸ், திரு சிதம்பரம் - பாரதிய ஜனதா கட்சி.

திரு பி. மாணிக்கம், திரு ஏ.எம். கோபு - கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா.

திரு ஏ. நல்லசிவம், திரு வரதராஜன் - கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா (மார்க்சிஸ்ட்).

திரு தண்டாயுதபாணி - இந்திய தேசிய காங்கிரஸ்.

திரு ஜி.ஏ. வடிவேல், திரு ஜெகவீரபாண்டியன் - ஜனதா தளம்.

திரு பி.சி. பழனியாண்டி - லோக்தளம் (பி).

திரு பி. சாரதி, திரு சி. அருணகிரி - தமிழ்நாடு காங்கிரஸ் (எஸ்).

திரு என்.வி.என். சோமு, திரு மிசா ஆர். கணேசன் - திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு டாக்டர் ராம்தாஸ், திரு ஆர். எழில்மலை - பாட்டாளி மக்கள் கட்சி.

திரு எஸ். ஆண்டித் தேவர் - பார்வர்டு பிளாக் (ஆண்டி அம்பலம் தேவர்).

திரு கே. வீரமணி - திராவிடர் கழகம்.

திரு ஜனாப் எஸ்.ஏ. காஜா மொய்தீன், திரு ஜபான் கே.ஏ. வகாப் - முஸ்லீம் லீக்.

திரு எஸ். திருநாவுக்கரசு - எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு எம். கந்தசாமி - பார்வர்டு பிளாக் (கந்தசாமி பிரிவு).

திரு கே. செல்லமுத்து - இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி.

திரு டாக்டர் சிவசாமி - இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி.

திரு பொன்குமார் - விவசாயிகள் தொழிலாளர் கட்சி.

திரு செ.கு. தமிழ் அரசன் - இந்தியக் குடியரசு கட்சி.

திரு அந்தோணி தாஸ் - இந்திய கிருத்துவ குடியரசுக் கட்சி.

திரு வை. பாலசுந்தரம் - அம்பேத்கர் மக்கள் இயக்கம்.

திரு பி. மாணிக்கம் - பாரத மக்கள் காங்கிரஸ்.

திரு எம்.எஸ். தம்பா - கிருத்துவ ஜனநாயக முன்னணி.

திரு சேலம் எம். சின்னப்பன் - கிருத்துவ ஜனநாயக முன்னணி.

திரு ஜேசன் பெர்னான்டோ - கிருத்துவ முன்னேற்றக்கழகம்.

திரு என்.பி. கல்யாணம் - டெக்கான் காங்கிரஸ்.

திரு கே. காளியப்பன் - இந்திய பொருளாதார விடுதலை இயக்கம்.

திரு ஆர்.எஸ். ஞானசேகரன் - காமராஜ் தேசிய காங்கிரஸ்.

திரு ஜெக வீரபாண்டியன் - இந்திய தொழிலாளர் மற்றும் வேலை தேடுவோர் கட்சி.

திரு ஆர். பக்தவச்சலம் - தமிழர் கழகம்.

திரு ஆர். குலசேகரன் - தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி.

திரு பி. நெடுமாறன், திரு தாமஸ் சேம்சன் - தமிழர் தேசிய இயக்கம்.

டாக்டர் சோழமன்னர் கனகராஜா - உலக மக்கள் நல மகிழ்ச்சி சிந்தனையாளர் கழகம்.

திரு தா. பாண்டியன் - இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி.

திரு அய்யணன் அம்பலம் - பார்வர்டு பிளாக்.

திரு டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி - மக்கள் சக்தி இயக்கம்.

திரு டி. தனசேகர் - தமிழக ஜனதா கட்சி.

திரு டி. வசீகரன் - அகில இந்திய சிறு பான்மையினர் கட்சி.

திரு கே.பி. ஷேக் தம்பி - தமிழ்நாடு முஸ்லீம் லீக்.

திரு டாக்டர் அமான் கான் - தேசிய மாணவர் கட்சி.


திருமதி ஜேன் - அகில இந்திய கிருத்துவ கட்சி.

திரு ஜஸ்டிஸ் பி. வேணுகோபால் - தென் மண்டல சமூக நீதிக்கான மையம் மற்றும் தமிழக மூதறிஞர்கள் குழு.

திரு டி. ஏகாம்பரம் - பகுஜன்சமாஜ்பார்ட்டி.

திரு எஸ்.எஸ். பழனிச்சாமி - இந்திய உழ்வர் உழைப்பாளர் கட்சி.

திரு முருகேசன் - தமிழ்நாடுமக்கள்முன்னேற்ற க் கூட்டுறவு சக்தி.



# சுற்றுலா

தமிழ்நாட்டின் மிக நீண்ட கடற்கரை, சிறிய தீவுகள், ஏரிகள், மலைவாழ் இடங்கள், பண்பாட்டு கலாச்சார மையங்களான கோவில்கள், அருங்காட்சியகங்கள், குகைக் கோயில்கள், சுவர் ஓவியங்கள், சரணாலயங்கள், இயற்கை நீருற்றுகள், நீர்வீழ்ச்சிகள், ஆகியவற்றைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1991-92-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1992-93-ஆம் ஆண்டில் 16.77 சதவிகிதம் அதிகரித்துள்ளது.


சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக 1991-92, 1992-93 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு முறையே ரூ.79.61 இலட்சம் ரூ.74.93 இலட்சம், ரூ.86.98 இலட்சம் உதவியையும் அளித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு அரசு ரூ.1.84 கோடியும், மத்திய அரசு ரூ.2.54 கோடியும் ஒதுக்கியுள்ளன. தமிழ்நாட்டில் சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டு முதலீடு, நிதி உதவி மற்றும் இதர சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முத்துக்காடு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சுற்றுலா மையங்கள் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. கும்பகோணம், தஞ்சாவூர், ராமேஸ்வரம், கன்னியாகுமரி, தரங்கம்பாடி, திருவரங்கம், திருத்தணி, பழநி, சிதம்பரம், மதுரை போன்ற 13 சுற்றுலா நகரங்கள் கலாச்சாரச் சுற்றுலா மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரத்தில் நடனவிழா சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, குற்றாலத்தில் சாரல் திருவிழா, கிருஷ்ணகிரியில் மாங்கனி விழா, கொல்லிமலையில் வல்வில் ஓரிவிழா, உதகை, கொடைக்கானல், மதுரையில் சித்திரைப்பெரு விழா, ஏர்க்காடு, கல்வராயன், ஏலகிரி ஆகிய மலைகளில் கோடைவிழா போன்ற விழாக்களைச் சுற்றுலாத்துறை ஆண்டுதோறும் நடத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில், ஓட்டல்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.2 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் பொது நிவாரண நிதி குவிகிறது!



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 19.11.93 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஜனார்த்தனன் அவர்கள் கால்நடை பராமரிப் புத்துறை சார்பாக ரூ.4,21,229-க்கான காசோலையை யும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் சார்பாக ரூ.2,50,000-க்கான காசோலையை யும் பால் உற்பத்தி மற்றும் பால்வளத்துறை சார்பாக ரூ.58,216-க்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.7,29,445-க்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.



தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக 1,16,812 ரூபாய்க்கான காசோலையையும், 200 லாந்தர் விளக்குகளையும் தமிழகத்திலுள்ள மசூதிகள் மற்றும் தர்காக்களில் பணிபுரியும் மூத்த வல்லிகளின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர் களிடம் வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் 19.11.93 அன்று வணிகவரித்துறை ஊழியர்கள் சார்பாக 5,04,000 ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காகவும், கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ.1,48,095 ரூபாய்க்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.6,52,095-க்கான காசோல்லையை தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எம்.கே.கிருஷ்ண சாமி, கான்வெண்ட் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் சார்பில் அதன் தாளாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களுடன் சென்று முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்காக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கினார்கள்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு பிரஜ் கிஷோர் பிரசாத் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,01,007-க்கான காசோலையை வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.என். வெங்கடரமணன் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,56,062-க்கான காசோலையை வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என். வாசுதேவன் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,42,492-க்கான காசோலையை வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் திண்டுக்கல்-அண்ணா மாவட்ட பால்வள ஒன்றிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் அதன் தலைவர் திரு வி.ஆர். ராஜாங்கம் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.70,000 வழங்கினார்.

## இந்தியாவில் கல்லூரிகள்

• நாட்டில் தற்சமயம் 180 பல்கலைக்கழகங்களும், 7,000 கல்லூரிகளும் உள்ளன. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது 23 பல்கலையும், 700 கல்லூரிகளுமே இருந்தன. தற்போது இக்கல்வி நிலையங்களில் 22 சதவிகித மாணவர்கள் வணிகவியலையும், 20 சதவிகிதம் பேர் அறிவியலையும், 5 சதவிகித மாணவர்கள் பொறியியல் - தொழில் நுட்பத்தையும், 3.4 சதவிகித மாணவர்கள் மருத்துவத்தையும், ஒரு சதவிகிதம் பேர் வேளாண்மையையும், 5 சதவிகிதம் பேர் சட்டத்தையும் 40 சதவிகித மாணவர்கள் கலையியல் படிப்பையும் பயில்கின்றனர்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் திரைப்படத் தயாரிப்பாளர் திரு கே.டி. குஞ்சுமோன் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.2,00,000-க்கான காசோலையை வழங்கினார்.

# மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!



### மீனவர்களுக்கு உதவி!

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் பெய்த பெரும் மழை மற்றும் வெள்ளத்தின் காரண மாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழும் மீனவர்களது 'வல்லம்' என்னும் வகை நாட்டுப் படகுகள் அதிக எண்ணிக்கையில் பாதிக்கப் பட்டதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மீனவ சமுதாயத்தினரின் சாதாரண மீன்பிடிப் படகுகளுக்கு ஏற்பட்ட சேதத்தினை ஈடுகட்டி, அவர்கள் மீண்டும் தங்களது மீன் பிடிப்புத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு உதவும் வகையில் 14.29 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். மேலும், இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள 'சின்ன ஏர்வாடி' என்ற மீன்பிடிக் கிராமத்தில் பெருமழை யினால் சேதமுற்ற மீன்பிடித் துறை யின் சுற்றுச் சுவர், மின்சார வசதி ஆகியவற்றைச் செப்பனிட 60,000 ரூபாயையும், மற்றும் இர்ாமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களில் சேதமடைந்த, தமிழக அரசு மீன் வளத் துறைக்குச் சொந்தமான விசைப் படகுகளைச் செப்பனிடும் பொருட்டு 1,39,000 ரூபாயையும், வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

### கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட...

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் பெய்த பெரும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள் ளத்தினால் மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன், திண்டுக்கல்-அண்ணா, திருச்சிராப்பள்ளி, சிதம்பரனார், காமராசர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கால்நடைகள், கோமாரி நோயினால் (Foot and Mouth Disease) பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம் மாவட்டங்களில் உள்ள கால் நடைகள் இந்த நோயினால், பாதிக் கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, அவைகளுக்கு உடனடியாகத் தடுப்பு ஊசி (Vaccination) மற்றும் இதர மருந்துகளை விரைந்து வழங்க 2.50 இலட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

### போர்க்கால அடிப்படையில் சாலை மற்றும் மராமத்துப் பணிகள்!

கடந்த நவம்பர் மாதம் தமிழ் நாட்டில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரண மாக, மாநிலத்தின் பல இடங்களில் சாலைகள், ஏரிகள், நீர்சாலைகள் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ள சாலைகளையும், உடைப்பு ஏற்பட்டு உள்ள ஏரி, கால்வாய், கண்மாய் போன்ற நீர்நிலைகளையும் பழுது பார்க்கவும், அவற்றை உடனடியாகச் செப்பனிடவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 10 கோடி ரூபாய் நிதி யினை வழங்கி ஆணை பிறப்பித்து உள்ளார்.

ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் பாசன நீர்நிலைகளில் மராமத்துப் பணிக்காக 3 கோடி ரூபாயும், மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் செப்பனிட 5 கோடி ரூபாயும், தேசீய நெடுஞ்சாலை களில் மராமத்துப் பணிகளை மேற் கொள்ள 2 கோடி ரூபாயும் செலவிடப்படும்.


மாவட்ட வாரியாகப் பாதிப்பு களை ஆராய்ந்து அவசியத்தின் அடிப்படையில் தேவைப்படுகின்ற இடங்களில் மேற்கண்ட நிதியைக் கொண்டு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் நிதியைக் கொண்டு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண் டும் என்றும், செப்பனிடும் பணிகள் போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்கப்படவேண்டும் எனவும், சம் பந்தப்பட்ட துறைகளின் தலைமைப் பொறியாளர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

> ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக் கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர் களுக்கு உதவ வேண்டும்.
>
> — அண்ணல் அம்பேத்கர்

# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர் மற்றும் அரசு அலுவலர்கள் தலைமைச் செயலகத்தில் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழியினை எடுத்துக் கொண்டார்கள் (19.11.93).












மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பர்கூர் தொகுதி மாதேபள்ளியில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கருங்கல் ஓடுகளை மெருகேற்றும் தொழிற்சாலையில் மெருகேற்றப்பட்ட முதல் கருங்கல் ஒட்டினை, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி அவர்களும் தமிழ்நாடு கனிம நிறுவன்த்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஏ.என். தியானேஸ்வரன் அவர்களும் (19.11.93) அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 19.11.93 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி அவர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அரசு பங்குத் தொகையாக ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையையும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அரசு பங்குத் தொகையாக ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.2 கோடிக்கான காசோலைகளை தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.




23.11.1993 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி 1993-இல், தமிழ்நாடு நாள் விழாவை மாண்புமிகு தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.



திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. மூர்த்தி அவர்கள் தமிழ்நாடு திருக்கோயில் புனரமைப்பு நிதிக்காக 2,00,000/- ரூபாயை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார். திரு. குன்னக்குடி வைத்தியநாதன் உடன் உள்ளார்.

மதுரை மாவட்ட வரைபடம்




## மதுரை மாவட்டம் முக்கிய விவரங்கள்

பரப்பளவு: 6,614.43 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை: 34,47,595

### வருவாய்க் கோட்டங்கள்:

1. மதுரை (மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், வாடிப்பட்டி)
2. உசிலம்பட்டி (திருமங்கலம், பேரையூர்)
3. பெரியகுளம் (பெரிய குளம், உத்தம பாளையம், ஆண்டிப்பட்டி)

### வளர்ச்சிக் கோட்டங்கள்

| மதுரை | உசிலை | பெரியகுளம் |
|---|---|---|
| மதுரை கிழக்கு | உசிலம்பட்டி | பெரியகுளம் |
| மதுரை மேற்கு | திருமங்கலம் | தேனி |
| திருப்பரங்குன்றம் | தே.கல்லுப்பட்டி | போடிநாயக்கனூர் |
| மேலூர் | கல்லிக்குடி | கம்பம் |
| கொட்டாம்பட்டி | செல்லம்பட்டி | சின்னமனூர் |
| அலங்காநல்லூர் | சேடபட்டி | உத்தமபாளையம் |
| வாடிப்பட்டி | பேரையூர் | ஆண்டி பட்டி |
| | | மயிலாடும்பாறை |
| | | கடமலைக்குண்டு |

**பேரூராட்சிகள்**

அவனியாபுரம்
திருப்பரங்குன்றம்
ஹார்விபட்டி நகரியம்
திருநகர்
பரவை
அ.வள்ளாளபட்டி
விளங்குடி
ஆனையூர்
உசிலை
பேரையூர்
அலங்காநல்லூர்
சோழவந்தான்
வாடிப்பட்டி
பாலமேடு
தே.கல்லுப்பட்டி
எழுமலை
ஆண்டிப்பட்டி
உத்தமபாளையம்
தேவாரம்
கூடலூர்
ஹைவேவில் நகரியம்
கோம்பை
புதுப்பட்டி
காமயக்கவுண்டன்பட்டி
வீரபாண்டி
கெங்குவார்பட்டி
தேவதானப்பட்டி
வடுகபட்டி
தென்கரை
தாமரைக்குளம்
பழநி ரெட்டிப்பட்டி
குச்சனூர்
அனுமந்தன்பட்டி
ஓடைப்பட்டி
பண்ணைப்புரம்
பூதிப்புரம்
பி.மீனாட்சிபுரம்
மார்க்கண்டேயன் கோட்டை
மேலச் சொக்கநாதபுரம்

துரை. தாமரைச் செல்வம்
செய்திமக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை.

# வரலாற்றில் மதுரை



• சுந்தர பாண்டியன்-வீரபாண்டியன் ஆகிய இரு மன்னர்களுக்கிடையிலான பதவிச் சண்டையால் பாண்டியர் ஆட்சி சீர்குலைந்தது; மாலிக்காபூர் மதுரை மாநகரைச் சூறையாடினான்; சுந்தர பாண்டியன் துணைக்கு அழைத்ததாலேயே அவன் இங்கு வந்தான்.

• குஸ்ருகான் டில்லியிலிருந்து மதுரை மீது படையெடுத்தான்; 1330-ல் மதுரையில் இசுலாமியர் ஆட்சி ஏற்பட்டது; முகமது-பின்-துக்ளக் காலத்தில், மதுரை டில்லி சுல்தான் ஆட்சிக்கு உட்பட்டது.

• முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் பாண்டிய நாடு முழுவதும் தஞ்சைச் சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்தது; அப்போதைய பாண்டிய நாடு ராஜராஜ மண்டலம் எனப்பட்டது.

• முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலிருந்து (1012-1044), மதுரையில் சோழ-பாண்டியர் என்ற பட்டத்தோடு அரசப் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

• இலங்கைப் படைகள் மதுரையை முற்றுகையிட்டதும், அவை சோழப் படையால் வெல்லப்பட்டதும் உண்டு; இதைப் பற்றி 'மகாவம்சம்' விவரிக்கிறது.

• சங்க காலம் முதல் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்ற பாண்டிய மன்னர்கள் ஆட்சி, கி.பி. 1330-ல் முடிவுற்றது. இதற்கு மேலும் சிலகாலம், தென்காசியைத் தலைநகராகக் கொண்டு பராக்கிரம பாண்டியன் என்பவர் அரசாண்டதாக வரலாறு தெரிவிக்கிறது.

• மதுரை நகரானது-விஜயநகர அரசரின் கீழும் (நாயக்க வம்சத்தார் வசம்), ஆர்காட்டு நவாப் ஆட்சியிலும் சிலகாலம் இருந்திருக்கிறது.

• ஆர்க்காட்டு நவாப்பிடமிருந்து வரிவசூலிக்கும் உரிமையைக் கி.பி. 1790-ல் பெற்றனர் ஆங்கிலேயர்கள். அப்போதுதான், வரி வசூலிக்க எனத் தனி அதிகாரி 'கலெக்டர்' என்ற பெயரில் முதன்முதலாக நியமிக்கப்பட்டார்; அவர் பெயர்-அலெக்சாந்தர் மக்லியோட் (Macleod). 1857 முதல் 1947 வரை இங்கிலாந்து அரசின் கீழிருந்தது மதுரை.

தொகுப்பு: பி.எல்.ஆர்.

அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள ரதிதேவி சிலை.

மதுரை மாவட்டம்:

# மன்னர் திருமலை



கிருஷ்ண தேவராயர் வழிவந்த விசுவநாத நாயக்கர்தான் கி.பி. 1529-ல் மதுரை மாநகரையே உருவாக்கிய சிறப்பினராகக் கருதப் படுகிறார். அவரால் தொடங்கப் பட்ட நாயக்க அரசு, கி.பி. 1736 வரை நீடித்தது. முதலாமவரான விசுவநாதரே திருச்சிராப்பள்ளியை யும், திருநெல்வேலியையும்கூட அழகு படுத்தியதாகவும் கூறப் படுகிறது.

நாயக்க வமிசத்தார் ஆட்சியில், விசுவநாதரைத் தொடர்ந்து-முதலாம் கிருஷ்ணப்பர், முதலாம் வீரப்பன், இரண்டாம் கிருஷ்ணப்பர், விசுவப்பர், கஸ்தூரிரங்கன், முத்துக் கிருஷ்ணப்பர், முதலாம் முத்து வீரப்பர் ஆகியோர் அடுத்தடுத்து அரசு செலுத்தி வந்தனர்.

இவர்களையடுத்து ஆட்சி பீட மேறியவர்தான், முத்து வீரப்பரின் சகோதரரான மன்னன் திருமலை (1623-1659). மதுரை, நாயக்கர் வமிச ஆட்சியினரிலேயே, முத்துக் கிருஷ்ணப்பரின் இரண்டாவது புதல்வரான இவர், மிகுந்த புகழ் பெற்றவராக விளங்குகிறார். 1584-ல் தைப்பூச நன்னாளில் பிறந்த இவருடைய இயற்பெயர் - திருமலை சவுரிநாயினு அய்யலுகாரு என்பதாகும்.

அதுவரை திருச்சிராப்பள்ளியே இவர்களுடைய தலைநகரமாக இருந்துவந்தது. 1634 முதல் தலை நகர அந்தஸ்தை மதுரையே பெற்றது. மதுரையைத் தலைநகராகக் கொண்ட இவர், தம் முன்னோர்கள் போலன்றி, விஜயநகர மன்னர்



'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று, யானை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரை'யில் இப்போதெல்லாம் எந்திரங்களே கதிரடிக்கின்றன!

தொலைபேசி எண்:
மதுரை தலைமையகம்: 602169
திண்டுக்கல் கிளை: 27354

## ஏ.2295, மதுரை கூட்டுறவு அச்சகம் லிமிடெட்.

12, திருப்பரங்குன்றம் சாலை, ஆண்டாள்புரம், மதுரை-625 003

உங்களது அச்சுப்பணிகள், தினசரி காலண்டர்கள், மாதாந்திரக் காலண்டர்கள், மாணவர் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றை சிறந்த முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து தருகிறோம். உங்கள் தேவைக்கு மதுரை மற்றும் திண்டுக்கல் கிளையை அணுகவும்.

**திண்டுக்கல் கிளை**

**ஏ.2295, மதுரை கூட்டுறவு அச்சகம் லிமிடெட்**
15, சிட்கோ தொழிற்பேட்டை, திண்டுக்கல்-624 006.

**விற்பனை நிலையங்கள்**

**மதுரை:** எம்.டி.சி.சி. வங்கி தலைமையகம், இராமலிங்க நகர், வசந்தநகர்.

**தேனி:** தேனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்., தேனி.

**திண்டுக்கல்:** பாண்டியன்நகர் கூட்டுறவுப் பண்டகசாலை லிட்., பாண்டியன்நகர்.

**உறுப்பினர்களுக்கு**

1. உச்சபட்சமாக 14% பங்கு ஈவு (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம்.
2. அச்சுக்கூலியின் மீது 10% வரை கொள்முதல் தள்ளுபடி (ரிபேட்) வழங்கி வருகிறோம்.

எல்லா கூட்டுறவு நிறுவனங்களும் உறுப்பினராகச் சேரலாம். பங்கு ஒன்றுக்கு ரூ.10 மட்டுமே. அச்சகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பயன் பெறுவீர்!

**அ. தவமணி,** எம்.ஏ., எச்.டி.சி., டி.சி.எம்.,
தனி அலுவலர்

களின் பிடியிலிருந்து முற்றிலுமாகத் தம்மை விடுவித்துக் கொண்டார்.

திருமலை மன்னராட்சிக் காலத்தில், முதலமைச்சராக இருந்தவர் நீலகண்ட தீட்சிதர்.

மதுரை மீது போர் தொடுத்த சாமரா உடையார் கி.பி. 1625-ல் திருமலை நாயக்கரால் தோற்கடிக்கப்பட்டார்; திருவாங்கூர் மன்னருக்கெதிராக இவர் அனுப்பிய படைகள் பெரு வெற்றிபெற்றன; இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத் தேவரும் போரில் வெல்லப்பட்டார்; மீண்டும் தலைதூக்கிய விஜய நகர மன்னரின் துடுக்குத் தனமும் ஒடுக்கப்பட்டது.

மைசூரை ஆண்ட கந்தீரவன், படைவலி மிக்கவனாக இருந்தான்; மதுரை மீது போர் தொடுத்த அவன், மதுரை மக்களின் மூக்கை அறுத்துத் தமது மன்னருக்கு அனுப்பி வைத்தான். இதைக்கண்டு கொதித்தெழுந்த மன்னர் திருமலை, இராமநாதபுரம் ரகுநாத சேதுபதி படைத்துணையோடு அக்கொடியவனை எதிர்த்துக் களம் புகுந்தான். மைசூருக்குள்ளேயே திருமலையின் படைகள் புகுந்து வெறியாட்டம் ஆடின; அவர்களைப் போலவே மைசூர் மக்கள் பலரின் மூக்கறுக்கப்பட்டது; அவை, மன்னன் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மைசூர் மன்னரின் மூக்கும் கூட இந்தக் கொடூரத்திற்குத் தப்பவில்லை!

இந்தப் போரே, திருமலையின் வீர வரலாற்றில் நடத்தப்பட்ட ஐந்து போர்களில் முக்கியமான ஒன்றெனக் கருதப்படுகிறது. இவர் படையில் 30,000 வீரர்கள் இருந்தனர். ஆயினும், போர்க்கள வெற்றிகளால் மட்டுமே அவர் புகழ் நிலை பெறவில்லை; அவருடைய ஆட்சி நிர்வாகச் சிறப்பே அதற்கு முக்கிய காரணம் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

வைணவரான மன்னர் திருமலை, சாதி சமயச் சகிப்புத் தன்மை மிக்கவராக விளங்கினார். சைவர்களையும் மதித்து நடந்து கொண்டார். கிறிஸ்தவப் பெருமக்களோடும் இவர் நட்பு பாராட்டியதுண்டு. இவருக்கு 200 மனைவியர் இருந்தனர் என்றும், அவர்களில் இரண்டு பேரே பட்டத்தரசிகளாக இருந்தார்கள் என்றும் வரலாறு கூறுகிறது. தலைசிறந்த கட்டடக்கலை நுணுக்க வல்லுநராகத் திகழ்ந்தார் இவர்; மதுரை நகரின் நடுவே இன்றும் பொலிவுறத்திகழும் திருமலை நாயக்கர் மகால் என்ற கட்டடம் ஒன்றே இதனை உறுதிப்படுத்தும்.

மதுரையில் அதுவரை மாசி

• மதுரை ஒரு முக்கியச் சந்திப்பாகும். அங்கிருந்து கிழக்கே இராமேசுவரத்திற்கும்; மேற்கே தேக்கடி, கோட்டயம், கொச்சி முதலிய இடங்களுக்கும்; தெற்கே தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய நகரங்களுக்கும், வடக்கே தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சென்னை, கோவை, நீலகிரி முதலிய நகரங்களுக்கும் தடங்கள் பிரிகின்றன.

—என். முருகன்

மாதத்தில் நடைபெற்று வந்த பெரு விழாவைச் சித்திரைத்திருவிழாவாக மாற்றினார் திருமலை நாயக்கர். வண்டியூர் தெப்பத் திருவிழாவைத் தம் பிறந்த நாளிலேயே நடைபெறச் செய்தார். அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில், அருள்மிகு வண்டியூர் மாரியம்மன் திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகப் பெருமான் திருக் கோயில், அழகர்மலை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் போன்ற பல கோயில்களிலும் இம்மன்னர் பெருமானால் கோபுரங்கள் கட்டப் பட்டன; திருப்பணிகள் செய்யப் பட்டன. பலிபீடங்கள், கொடிக் கம்பங்கள் அமைக்கப்பட்டன.

திருமலை மன்னரால் 1636-ல் கட்டி முடிக்கப்பட்டதே 'மகால்' எனக் குறிப்பிடப்படுவதாகும். அதுவே இவருடைய அரண்மனை யாக விளங்கியது. திருமலை மன்ன ரால் 'சொர்க்க விலாசம்' என்றே இக்கட்டடத்தில்அவர் வாழ்ந்த பகுதி குறிப்பிடப்படுகிறது.

இந்த மகாலில் நான்கு பெரும் பகுதிகள் இருந்ததாகவும், இப் போதுள்ளது எஞ்சியுள்ள ஒரு பகுதியே என்றும் கூறுகிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

திருமலை நாயக்கர் மகாலில் கனகம்பீரமாக, உருண்டு திரண்டு இன்னமும் பளபளப்போடு நிற்கும் தூண்களின் எண்ணிக்கை 248. ஏறத்தாழ 5 மீட்டர் சுற்றளவுள்ள ஒவ்வொரு தூணும் 4.5 மீட்டர் முதல், 9 மீட்டர் வரை உயரம் உடையதாகும்.

இந்தியாவில் உள்ள வேறெந்தப் பழங்காலக் கட்டடத்திலேயும் இத் தனைப் பருமனும் உயரமும் கொண்ட தூண்கள் கிடையாது.

இந்தக் கட்டடத்தின் இன்னொரு முக்கிய வியப்புக்குரிய செய்தி என்ன தெரியுமா? இரும்போ, மரமோ மகாலின் எந்தப் பகுதிக்கும் அறவே பயன்படுத்தப்படவில்லை!

தாமரை மொட்டுப் போன்ற குளிமாடங்களும், மாட விளக்குப் போன்ற கலைநுணுக்கம் மிக்க வளைவுகளும் ஆகிய யாவுமே - சுண்ணாம்பு, மண், செங்கல், கருங்கல் ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே உருவாக்கப்பட்டிருப்பது ஓர் அற்புதம்! இம் மகாலின் உட்புற இடைவெளி 252 அகலமும், 151 அடி நீளமும் உடையதாகும்!

கட்டடக்கலை நுணுக்கம் வல்லார் இந்துக்காலக் கட்டடக்கலை, இசுலாமி யரின் கட்டடக்கலை, ஐரோப்பியக் கட்டடக்கலை, மூன்றுமே திருமலை நாயக்கர் மகாலில் கைகோத்துக் கொண்டு காட்சியளிக்கின்றன என்று உறுதியோடு தெரிவிக் கிறார்கள்.

இத்தனைச் சீரும் சிறப்பு மிக்க இந்த அரண்மனை, மன்னர் திருமலை நாயக்கர் தமது 75-ஆம் வயதில் மறைந்த பிறகு - பிற் காலத்தில் அதே சிறப்பினதாகப் பாதுகாக்கப்படவில்லை; பிற் காலத்தில் அதன் பெரும்பகுதி அவருடைய பேரப் பிள்ளை யாலேயே இடித்துத் தள்ளப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது.

பிற்காலத்தே, பழஞ்சின்னங் களைப் பாதுகாக்கும் பண்புடைய ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியது; சென்னையிலிருந்த ஆங்கிலேய ஆளுநர் நேப்பியர் பிரபு முயற்சி யால் - இப்போதுள்ள கட்டடப் பகுதியானது ஆங்கிலேய அரசாலேயே செப்பனிடப்பட்டது.

1886-க்குப் பின்னாலே சில காலம் இக் கட்டடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் செயல்பட்டது; மதுரை-இராமநாதபுர நீதிமன்றங்களும் சில காலம் இங்கே செயல்பட்டதுண்டு.



தமிழ்நாடு அரசால் 1981-ல் இம் மகாலில், 45 நிமிட நேர ஒலி-ஒளி காட்சி தொடங்கப்பட்டது; அதன் மூலம், திருமலை நாயக்கரின் வரலாற்றை அறிய உள்ளூர், வெளியூர், பிற மாநில மக்கள் மட்டுமல்ல; வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் ஏராளமான அளவில் நாள்தோறும் வருகிறார்கள், கண்டு மகிழ்ந்து நலவின்பம் பெறு கிறார்கள்.

—'இந்திரன்'

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

தமிழ்நாட்டில் வனத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்ப தற்காக மதுரை மாவட்டம் வைகை அணை அருகே தமிழ்நாடு வன வியல் கல்லூரி 1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சுமார் 200 எக்டேர் நிலப்பரப்பில் அமையப் பெற்ற இந்தக் கல்லூரி, வனத்துறை அலுவலர்கள் பயிற்சிக்காகத் தமிழ கத்தில் நிறுவப்பட்ட ஒரே கல்லூரி யாகும்.

இந்தக் கல்லூரியில் வனவர் களுக்கு (Forester) ஓராண்டுப் பயிற் சியும் வனப்பாதுகாவலர்களுக்கு (Forest Guards) ஆறு மாத காலப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வனவர் பயிற்சி ஜூலையில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை நடைபெறும். வனப் பாதுகாவலர்களுக்கு சனவரி முதல் ஜூன் மாதம் வரை ஒரு பிரிவும் ஜூலை மாதம் தொடங்கி டிசம்பர் வரை ஒரு பிரிவுமாக ஆண்டுக்கு இரு பிரிவுகளுக்குப் பயிற்சி அளிக் கப்படுகிறது. ஒரே சமயத்தில் 60 வனவர்களுக்கும், 60 வனக் காவலர் களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப் படுகிறது. தற்சமயம் இந்த வனக் கல்லூரியில் 33-வது பிரிவு வன அலுவலர்களுக்கும், 60-வது பிரிவு வனக் காவலர்களுக்கும் பயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வனத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இங்கு 6 பயிற்றுநர்களும், 2 உதவிப் பயிற்று நர்களும் உள்ளனர். இதைத்தவிர இளம் பொறியாளர் ஒருவரும், கல்லூரி வளாகப் பராமரிப்பு, மான் பூங்கா, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாடு ஆகியவற்றிற்குத் தனித்தனியே ஒரு வனத்துறை அலுவலரும் (Forester) பணியாற்று கிறார்கள்.

பயிற்சிக் காலத்தில் 13 பாடங்கள் கற்பிக்கப்பட்டு இறுதியில் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வில் வெற்றி பெறாத வன அலுவலர்கள் மீண்டும் தேர்வு எழுதத் தேர்ச்சி பெற வேண்டும். ஒரு வனவரோ அல்லது வனப் பாதுகாவலரோ பதவி உயர்வு பெறவேண்டுமாயின் இங்கு பயிற்சி பெறுதல் அவசியமாகிறது. இதன் காரணமாக வனத்துறை அலுவலர்கள் பணி மூப்பின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

பயிற்சிக் காலத்தின்போது வன அலுவலர்கள் 4 மாத காலமும் வனப் பாதுகாவலர் 2 மாத காலமும் அண்டை மாநிலங்கள் மற்றும் தமிழ கத்திலுள்ள பிற மாவட்டங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். சுற்றுலாவின் போது மலையேறும் பயிற்சி போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

வன அலுவலர்களுக்குத் துப் பாக்கி சுடுதல், மாரத்தான் ஓட்டம் போன்றவற்றில் இந்தக் கல்லூரியில் தக்க பயிற்சி தரப்படுகிறது.

இங்கே பணியாற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் தங்குவதற்குத் தனித்தனி வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளன. பயிற்சிக் காலத்தின் போது வனத்துறை அலுவலர்கள் தங்குவதற்கு வசதியும், உணவக வசதியும் செய்து தரப்பட்டுள்ளன.

வனக்கல்லூரி வளாகத்தினுள் கல்லூரியைத் தவிர, வன அரும் பொருட்காட்சியகம் ஒன்றும், தனி அரங்கம் (Auditorium) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. இந்த அரங்கம் ரூ.11 இலட்சம் செலவில் கட்டப் பட்டு 12.6.93 அன்று மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் சேடபட்டி முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவற்றைத் தவிர இங்கு ஒரு அழகிய மான் பூங்காவும் (Deer Park) பராமரிக்கப்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தில் சந்தன மரங்கள் முதலாக அனைத்து ரக மரம் மற்றும் பயன்தரு செடி வகைகளும் வளர்க்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகின்றன.

மதுரை, வைகை அணை வன வியல் கல்லூரி நாட்டிலேயே சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகும்; இதனா லேயே அந்தமான் வனத்துறை தமது இரு வனத்துறை அலுவலர்களை 1985-ஆம் ஆண்டு பயிற்சிக்காக அனுப்பி வைத்ததாகவும், மற்ற மாநிலத்திலிருந்தும் அனுப்பி வைக் கப்படுவதாகவும் இந்தக் கல்லூரி யின் பயிற்றுநர் திரு. டி.என். அம்பலத்தரசன் தெரிவித்தார்.

—ஜே.சி.





# வீரத் தமிழர் விளையாட்டு

—த. அன்பழகன்

தமிழகத்திலே கலையும் இலக்கியமும் மட்டும் தோன்றவில்லை. திண்தோள் கொண்ட காளையர்கள் பங்கேற்கும் வீர விளையாட்டுகள் பலவும் இருந்தன; இன்றுமிருக்கின்றன. அவ்வாறு தோன்றிய விளையாட்டுகளில் ஒன்றுதான் ''மஞ்சு விரட்டு'' எனப்படும் ஜல்லிக்கட்டு என்ற வீரவிளையாட்டு. இந்த விளையாட்டு இன்று நேற்றுத் தோன்றியதல்ல. தமிழ்ச் சங்கங்கள் கண்ட மன்னர்கள் காலத்திலேயே இவ்விளையாட்டுப் புகழ் பெற்று விளங்கியது. இத்தருணத்தில் இவ் விளையாட்டின் பெயர் ''ஏறு தழுவுதல்'' என்பதாகும். அந்நாட்களில் திருமணமாகாத இளங் காளையர்கள் ஏறு தழுவுதலில் ஆர்வமுடன் பங்கேற்றனர். இந்த ஆர்வத்திற்கு வேறோரு சிறப்புக் காரணமும் உண்டு!

அக்கால ஆண்மகன் தன் மனம் விரும்புகின்ற காதலியரின் கடைக்கண் தரிசனம் பெற வேண்டுமெனில், அவளை மணக்க வேண்டுமெனில் அம்மங்கையரின் முன் அவன் தானொரு வீரன் என்பதை நிரூபிக்க வேண்டும். இதற்காகவே ''ஏறு தழுவும்'' விளையாட்டில் பங்கு கொண்டு சீறி வரும் காளையை அடக்கித் தன்னை ஆண் சிங்கமென நிரூபிப்பான் அவன். இந்த விளையாட்டில் வெற்றி பெறும் வீரனின் பால் மையல் கொண்ட மங்கையரும் அவனை மணம்புரிந்து, அவன் பெற்ற வீரத் தழும்புகளில் முத்த மிட்டு மகிழ்ந்தார்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**மன்னரே களம்காணல்**

ஏறு தழுவும் விளையாட்டு அக்காலத்திலேயே தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் பெருவிழாவாக எடுக்கப்பட்டது. தைத்திரு நாளின் போது உழவுக்கு வந்தனை செய்யும் வகையில், இவ் விழா கொண்டாடப்பட்டது. இவ் விழாவுக்கென அக்காலத்திலேயே பெரிய மைதானங்கள் தயார் செய்யப்பட்டு அதனுள் விளையாட்டுகள் நடந்துள்ளன. இவ்விழாக்களில் பல கிராமங்களில் இருந்தும் காளைகள் வந்து பங்கேற்கும்.

தடித்த திமில்களோடும், பளப் பளப்புடன் சீவப்பட்டு நீண்டும், வளைந்தும் காணப்படுகின்ற கொம்புகளோடும், எதிரியை எந்நேரமும் பதம் பார்க்க கோபாவேசத்தோடு நிற்கின்ற இந்தக் காளைகளை அடக்க பல்வேறு கிராமங்களில் இருந்து காளையரும் வந்திறங்குவர். மன்னர் குடி மக்கள் முன்னிலையில் 'மஞ்சு விரட்டு' ஆரம்பமாகும். சீறிடும் காளைகளின் கூரிய கொம்பிலும், கழுத்திலும் பணமுடிப்புகள் காணப்படும். சில பெருந்தனக்காரர்கள் தங்களது காளையை அடக்கிடும் மாவீர

---


• இவ்வுலகில் மதங்கள் தொடர்பான பல வேறுபாடுகள் இருக்கக் கூடும்; மதங்களைப் பற்றிய நம் கருத்து எவ்வாறிருப்பினும், கடவுளின்கீழ் நாமெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்.

—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

---

னுக்குத் தங்களது மகளிரையே மண முடித்துத் தருவதாகப் பந்தயம் கட்டு வார்கள்.

கி.பி. 1742-இல் விஜயரகுநாத சேதுபதி மன்னனே இவ்விளையாட்டில் பங்கு கொண்டதாகத் தெரிய வருகிறது. ராமேஸ்வரம் செல்லும் வழியில் உள்ள அக்காமடம் என்ற பகுதியில் இவ்விழா நடந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாஞ்சாலங் குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டு வந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளுள் ஒருவனும், வலதுகரமாக விளங்கிய வனுமான வெள்ளையத்தேவன் என்ற வீரன் 'மஞ்சு விரட்டில்' கலந்து கொண்டு காளையை வெற்றிகண்ட



பின்னரே தன் காதலி வெள்ளையம்மாளைக் கரம் பிடித்தான் என்பதும் வரலாறு.

இன்னும் பல வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட 'ஜல்லிக்கட்டு' வீர விளையாட்டு இன்றும் மதுரையை மையமாகக் கொண்டு பல கிராமங்களில் சிறப்பாக நடந்து வருகிறது.

**சங்க காலத்தில்...**

ஏறு தழுவுதல், சங்க காலத்தே பெரிதும் புகழ் பெற்றிருந்தது. சங்க இலக்கியங்களில் - எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை முல்லைக்கலியில் இந்த வீர விளையாட்டுப் பற்றிய பாடல் பல உண்டு.

ஏறு தழுவும் காளையர்-பிடவம், செங்காந் தள், காயா ஆகியவற்றின் மலர் மாலைகளை அணிந்திருப்பார்கள். மணத்திற்குத் தயாராக உள்ள மங்கையரோ - பிடவம், முல்லை, தோன்றி, கொன்றை மாலைகளை அணிந்து பரண்மேல் அமர்ந்து இந்த வீர விளையாட்டைக் கண்ணுறுவர்.

**சல்லிக்கட்டு**

மஞ்சு விரட்டின்போது மாட்டின் கழுத்தில் கட்டும் வளையமானது 'சல்லி' எனப்படும். அதைப் பெரும்பாலும் புளிய மிலாறினால் கட்டுவர். அதில் வெள்ளிக் காசுகளோ, பொற்காசுகளோ முடியப் பட்டிருக்கும். இத்தகைய 'சல்லி' யைக் கட்டுவதாலேயே இவ் விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் கூறுவது உண்டு.

மஞ்சு என்கிற ஒருவகை நாரினாலும் இவ்வளையம் முடியப் படும்; அதனால்தான் 'மஞ்சு விரட்டு' மாட்டைப் பிடிப்போர் அந் தப் பரிசுப் பொருட்களை எடுத்துக் கொள்ளுவார்கள்; ரொக்கப் பரிசும் தரப்படுவதுண்டு.

**அலங்காநல்லூர்**

இப்போது மாட்டுப் பொங் கலன்றோ, அதற்கு மறுநாளோ இந்த வீர விளையாட்டு ஒரு சில கிராமங்களில் மட்டுமே நடைபெறுகிறது. வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் மட்டுமே வழங்கப் படுகின்றன.

இந்நாளில் - மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர், அரளிப்பாளையம், சிறாவயல், உறங் கான்பட்டி ஆகிய இடங்களில் மட்டுமே மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இதையே மாடுபிடித்தல், எருதுபிடித்தல், காளைச் சண்டை என்றெல்லாம் குறிப்பிடுவதுண்டு.

பல ஊர்க் காளைகளும் இவ் விழாவிற்குக் கொண்டுவரப்படும்.

கிரேக்க ரோமானிய நாடு களிலும் இத்தகைய வீர விளையாட்டு நடைபெற்று வருகிறது.

**ஆபத்தான விளையாட்டு**

மஞ்சி விரட்டில் ஈடுபடும் இளைஞர் பலரும் படுகாயம் அடைவதுண்டு; முரட்டுக் காளைகளின் கூரிய கொம்புகள் சிலர் உயிரையே பறித்துவிடுவதும் உண்டு.

குறிப்பாக - அலங்காநல்லூரில் இந்த ஆபத்தான விளையாட்டு அமர்க்களமாக நடத்தப்பட்டு வருகிறது; உள்ளூர் வெளியூர் மக்கள் மட்டுமல்ல; வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வீர விளையாட்டைக் கண்டுமகிழ வந்துவிடுவது உண்டு.

# சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு

2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா

10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்

600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
  1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# ஆட்சித் தமிழுக்கு அழகு சேர்க்கும் மதுரை

இ. திருவள்ளுவன்
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் மதுரை



“‘பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கை யில் அரசு தொடர்ந்து உறுதி யோடு இருக்கும். தமிழ் மாநில ஆட்சிமொழியாகவும், ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பு மொழியாகவும் இருக்கவேண்டும் என்கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இனி இருக்கப் போவதும் இல்லை.

‘இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதுதான், இந்த அரசின் உறுதியான கொள்கையாகும். அதுவே தமிழக ம்க்கள் அனைவரின் ழுழுமையான விருப்பமும் ஆகும்.’’

—என 10.2.93 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் சூளுரைத்தார்கள். ஆட்சிமொழிச் செயலாக்கத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ் வளர்ச்சித் துறை, இச்சூளுரையைப் போற்றும் வகையில் மதுரையில் ஆற்றிவரும் அரும்பணிகள் அளவிட இயலாது.


அரசு அலுவலகங்களிலும், அரசு சார்துறைகளிலும், தன்னாட்சி நிறுவனங்களிலும் தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயல்பாடு குறித்து ஆய்வுசெய்து வழிகாட்டுவதே முக்கியப் பணியாகும். எனினும் செல்லும் இடமெல்லாம் - எவ்வாறு பிழையின்றிக் குறிப்புகளும் வரைவுகளும் எழுதுவது - அயற் சொற்களுக்கான கலைச் சொற்கள் யாவை? என ஒல்லும் வகையெல்லாம் வழிகாட்டி வருகிறது. மதுரை தமிழ் வளர்ச்சித் துறை இது தொடர்பாக ஆய்விடங்களில் நடத்தப்பெற்ற பயிற்சி வகுப்புகள் ஏராளம்! ஏராளம்?

இத்திங்கள் முதல் வருவாய் நிருவாக முதன்மை ஆணையரின் அறிவுறுத்தலுக்கும் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் வழிகாட்டலுக்கும் இணங்க, மதுரை ஆட்சியரின் ஆணையின்படி இருமுறை தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன.

சிறந்த முறையில் தமிழில் கோப்புகளை எழுதும் பணியாளர்களுக்கு அரசு பரிசுகள் நல்குவதை அறிவோம்! மதுரையோ பணியாளர்களுக்குப் பரிசு வழங்குவதுடன் அமைதி கொள்ளவில்லை: ‘எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்றும் தமிழ்!’ என்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் அலுவலர்களுக்கும், அரசிற்கும் பெருமை சேர்க்கும்வகையில், இத்திட்டப் பணியில் முன்னோடியாக இருக்கும் துறைகளுக்கும் மதுரையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு நடைபெற்ற ஆட்சிமொழிக் கருத்தரங்கில் செய்தித்துறை, தீயணைப்புத்துறை, பதிவுத்துறை முதலான பல அரசுத் துறைகளும், மதுரை மாநகராட்சி, மின்வாரியம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் முதலான உள்ளாட்சி, தன்னாட்சி நிறுவனங்களும் பரிசு பெற்றன.

ஒவ்வொன்றிற்கும் அரசையே எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கக் கூடாது! என்பது முதல்வர் விடுத்த அன்புக் கட்டளையல்லவா? இதற்கேற்ப மதுரை தமிழ் வளர்ச்சித் துறையும் ஆட்சித் தமிழுக்குப் பெருமைசேர்க்கும் பல்துறை வல்லாரையும் பாராட்டி வருகிறது. முந்தைய ஆண்டுகளில் தமிழில் நூல்கள் எழுதியும் விண்ணப்பிக்கும் வாய்ப்பு அறியாமல் பரிசு பெறாதோர் பலர். கடந்த ஆண்டு சித்திரைப் பொருட்காட்சியில் செய்தித்துறை அரங்கு வாயிலாகத் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் பணிகள் மக்களுக்கு விளக்கப்பட்டன. இதன்மூலம் விவரம் அருந்து தமிழக அரசின் பாராட்டைப் பெறத் துடித்தோர்

திருவாதவூரில் ‘திருவாசகம்’ அருளிய மாணிக்கவாசகர் பிறந்த இடம்.



பலர் ஒவ்வொரு துறையிலும் 'மருத்துவத் தமிழ் ஆர்வலர், சட்டத் தமிழ் ஆர்வலர், இதழியல் தமிழ் ஆர்வலர், இசைத் தமிழ் ஆர்வலர், ஆட்சித் தமிழ் ஆர்வலர் என்றும் இன்னும் பல வாறாகவும் உள்ள ஆர்வலர்கள் கண்டறியப்பட்டு, பொதுக் கூட்டங்கள் நடாத்தி மக்கள் கடல் இடையே விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்யப் பெற்றமை எங்கும் நடைபெறாத புதுமை!

தமிழன்னை, திருவள்ளுவர் முதலான சங்கப் புலவர்கள், நாவலர் பாரதியார் முதலான இக் காலப் புலவர்கள் ஆகியோரைத் திருவள்ளுவர் புத்தாண்டிலும், தமிழ்ப் புத்தாண்டிலும் மாநகராட்சித் துணையால் தூய்மை செய்து வருவதும் குறிப்பிடத்தக்க தொண்டுப் பணியாகும்.

அரசுப் பணியாளர்களிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மூலமும் ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்தி வருகின்றது. மதுரை அலுவலக முகப்புகளும் பலகையில், தமிழ் இலக்கணக் குறிப்பு ஒன்று தமிழ்ப்பா ஒன்று, கலைச் சொல் ஒன்று' என்ற முறையில் எழுதி வைத்து விழிப்புணர்வை வளர்த்துவருகிறது.


இலக்கணக் குறிப்புகள், அன்றாட அலுவலகப் பயன்பாட்டிற் கேற்ப எடுத்துக்காட்டுக் கூறி 'எழுதுவது எளிதே!' என்ற கையேட்டையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணையுடன் அனைவருக்கும் வழங்கியுள்ளது; இது போன்ற இலவசக் கையேடுகளைத் தரும் தொடர் முயற்சியிலும் ஈடு பட்டு வருகிறது.

பொருட்காட்சி அரங்குகளிலே தமிழ் இடம் பெறாமை அரசு கொள்கைக்கு எதிரானது என்பதை உணர்த்த செய்தித்துறை துணையுடன் போட்டிகள் வைத்துப் பரிசு நல்கியும் மதிப்பெண் வழங்கியும் அரங்குகளில் தமிழ் மணம் கமழச் செய்தது. அதுமட்டுமல்லாமல் தமிழ் வளர்ச்சி தொடர்பான முழக்கங்களையும் தமிழ் ஆட்சிமொழி குறித்த முதல்வரின் கொள்கை முழக்கத்தையும் பல்வேறு துறைகளில் எழுதிவைக்கச் செய்தது.

கடைப் பெயர்களைத் தமிழில் வைக்க வழிகாட்டல், மொழி பெயர்ப்பிற்கு உதவுதல், கலைச் சொல்லாக்கம் உருவாக்கம், என்பன போன்ற பல்வேறு பணிகளையும் ஆற்றிவருகிறது.

'தமிழ் என்றால் மதுரை!
மதுரை என்றால் தமிழ்!'

— என்பது சங்க காலத்திற்கு மட்டுமல்ல, இக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை எக்காலமும் மெய்ப்பிக்கும் வகையில் தமிழ்நலம் நாடும் மாண்புமிகு முதல்வருக்கும் தமிழக அரசிற்கும் பெருமைசேர்க்கும் முறையில் மதுரை -. தமிழ் வளர்ச்சித்துறை பீடுநடைபோட்டு அரும்பணி பல ஆற்றிவருகிறது.



★ மதுரை மாநகரில் உள்ள முக்கியமான கோயில்கள் ஏராளம். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மட்டுமே குறிப்பிடத்தக்கது அல்ல; இன்னுமுண்டு - சிம்மக்கல் அருகில் உள்ள பழைய சொக்கநாதர் கோயில், தெற்கு மாசி வீதியில் உள்ள ஏகாம்பரேசுவரர் கோயில், செல்லூர் திருவாப்புடையார் கோயில், சிம்மக்கல் அருகில் உள்ள செல்லத்தம்மன் கோயில் ஆகியவைகளும் மதுரை நகரின் பழமை மிக்க சிவ வழிபாட்டுத் தலங்களே. செல்லத்தம்மன் கோயிலில் கண்ணகியும் ஒரு தெய்வமாக வழிபாடு செய்யப்படுகிறார்.

இம்மையில் நன்மை திருவார் கோயில், மதன கோபால சுவாமி கோயில், தெற்குக் கிருஷ்ணன் கோயில், வடக்குக் கிருஷ்ணன் கோயில், தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் ஆகியவைகளும் மாவட்டமெங்கும் பரவலாகக் காணப்படும் சமணர் கோயில்களும் குறிப்படத்தக்கவைகளே. இவை தவிர, பள்ளிவாசல்களும், கிறித்தவ ஆலயங்களும் நிரம்ப உண்டு.

## உசிலம்பட்டியில்

# ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்

— டி. மாடசாமி
துணை இயக்குநர், (T&V)
மதுரை

நம் நாட்டில் மொத்த சாகுபடிப் பரப்பில் 60 சதவிகிதப் பரப்பில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப் படுகிறது. எனவே மானாவாரி நிலங்களில் அபிவிருத்திப் பணி களைச் செய்வதன் மூலம் மானா வாரி நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து விவசாயிகளின் வாழ்க் கைத் தரத்தை முன்னேற்ற முடியும்.

"புஞ்சை விளைந்தால் பஞ்சம் போகும்" — என்ற பழமொழி யினைக் கருத்தில் கொண்டு மானா வாரிப் பகுதிக்கான அபிவிருத்திப் பணிகளைச் செயலாக்க வேண்டும்.

மானாவாரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் அதுவும் குறிப்பாக - சரிவாக உள்ள நிலங்களில் பெய்யும் மழை நீர், தேங்கி நிற்பதில்லை. தாழ்வான பகுதிகளுக்கு வழிந்தோடி விடுகிறது. ஆகவே, அந்நீர் பயிர் வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை. இது மட்டுமன்றி, மழை நீர் வேக மாக வழிந்தோடும்பொழுது அதனு டன் மண் துகள்களையும் வாரிச் செல்கிறது. இதன் மூலம் சத்தான மேல் மண் அடித்துச் செல்லப் படுகிறது. இதனால் படிப்படியாக நிலவளம் குறைகிறது. மேலும் பல வகைகளில் நமக்குப் பாதிப்புகளும் கீழ்க்கண்டவாறு ஏற்படுகிறது.

(1) பெய்யும் மழை நீர் முழுவது மாகப் பயன்படாமல் வழிந் தோடி விடுகிறது.

(2) மழை ஈரம் பயிரின் தேவை யான கால கட்டங்களில் குறைந்து விடுவதால் வறட்சி நிலையால் பயிர் மகசூல் கணிசமாகக் குறைகிறது.

(3) சத்தான மேல் மண்ணும், அங்க கப் பொருட்களும், பயிர் உண வுச் சத்துக்களும் அடித்துச் செல்லப்பட்டு, நிலவளம் குறை கிறது. இதனால் மகசூல் குறைந்து வருமானத்தில் இழப்பு ஏற் படுகிறது.

(4) இப்பகுதிகளில் மானாவாரி விவசாயம் நிச்சயமற்றதாகி வரு கிறது. ஒரு சில ஆண்டுகளுக் குள் நிரந்தரமாக இப்பகுதி தரிசாக மாறிவிடுகின்றது.

எனவே, மானாவாரி நீர் பிடிப் புப் பகுதி அபிவிருத்தியில் முதல் கட்டமாக சரிவான பகுதிகளில் பெய்யும் மழைநீர் முழுவதுமாக அப்பகுதியிலேயே தங்கி அந்நிலத் தில் சாகுபடியாகும் பயிருக்குப் பயன்படச் செய்வதற்காகச் சரிவுக் குக் குறுக்கே கோடை உழவு செய்வ துடன் தாவரத் தடுப்பும் அமைக் கப்படுகிறது. இதனால் மண் வளம் மற்றும் நீர்வளம் அதிகரிக்கப்படு கிறது. இரண்டாவது கட்டமாக இவ் வாறு சீர்திருத்திய பகுதிகளில் சாகு படியாகும் பயிர்களில் எல்லா மானாவாரித் தொழில்நுட்ப உத்தி களையும் கையாள்வதால் பயிர் மகசூல் அதிகரிக்கப்படுகிறது.

பயிர் சாகுபடியின் ஒரு அம்ச மாகச் செலவைக் குறைக்கும் விவ சாயக் கருவிகள் பயன்படுத்தப்படு கின்றன.


நீர்பிடிப்புப் பகுதிகளில் நிரந்தர மான பலன்தரும் மரக் கன்றுகள் மற்றும் பழ மரங்களை நடுவதன் மூலம் தொடர்ந்து ஆண்டுதோறும் வருமானம் பெற்றிடலாம்.

மதுரை மாவட்டத்தில் உசிலம் பட்டி வேளாண்மைக் கோட்டத்தில் ஒருங்கிணைந்த மானாவாரி நீர்ப் பிடிப்புத் திட்டத்தின்கீழ் 32 கிரா மங்களில் 3000 எக்டேர் நிலப் பரப்பு தேர்வு செய்யப்பட்டு 1992-93-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆறு ஆண்டு களில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு 3,000 எக்டேர் நிலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

1992-93-இல் 200 எக்டேர் நிலப்பரப்பும், 1993-94-இல் 300 எக்டேர் நிலப்பரப்பும், 1994-95-இல் 400 எக்டேர் பரப்பும், 1995-96-இல் 600 எக்டேர் பரப்பும், 1996-97-இல் 700 எக்டேர் பரப் பும், 1997-98-இல் 800 எக்டேர் பரப்பும் ஆக மொத்தம் 3000 எக்டேர் நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்படும்.

**அபிவிருத்திப் பணிக்கான நிதி அளவு**

| | (எக்டேருக்கு) |
|---|---|
| கோடை உழவு | ... ரூ.200 |
| தாவரத் தடுப்பு | ... ரூ.400 |
| மரம் வளர்த்தல் | ... ரூ.1500 |
| பழ மரம் வளர்த்தல் | ... ரூ.1500 |
| பயிர் நிரூபணம் | ... ரூ.750 |
| விதைப்புக் கருவி வழங்குதல் | |
| கருவி ஒன்றுக்கு | ... ரூ.400 |



மண்ணரிப்பைத் தடுக்கும் வெட்டிவேர்ச் செடி.



அலங்காநல்லூர் கூட்டுறவு தேசிய சர்க்கரை ஆலை.

நீர்பிடிப்புப் பகுதிகளில் ஆறாண்டுச் செயல்திட்டத்திற்கு - கோடை உழவு, தாவரத் தடுப்பு அமைத்தல், பலன்தரும் மரம் வளர்த்தல், பழ மரங்கள் வளர்த்தல், விதைப்புக் கருவிகள், பயிர் நிரூபணங்கள் அமைத்தல் என்ற வகையில் 150 எக்டேரிலிருந்து 3000 எக்டேர் வரை ரூ.22.004 இலட்சம் ரூபாய் செலவாகும்.

மொத்தம் ரூ.22.04 இலட்சம் நிதி உதவியுடன் இந்த நீர்பிடிப்பு பகுதியின் 3000 எக்டேர் பரப்பு மானாவாரி பகுதியில் அபிவிருத்திப் பணிகள் செய்யப்படும்.

**வெட்டிவேர் தாவரத் தடுப்பு**

மானாவாரி நிலங்களில் நிலத்தையும், நீரையும் சரியாக நிர்வகிக்காவிட்டால் சில ஆண்டுகளில் நிலம் சாகுபடிக்குப் பயனற்றதாகிவிடும்.

சரிவான மானாவாரிப் பகுதிகளில் கிடைக்கும் மழை நீரை நிலப் பகுதி ஆங்காங்கே உறிஞ்சி மழை நீர் வழிந்தோடி வருவதைத் தடுப்பதன்மூலம் பயிர் மகசூலை அதிகப் படுத்தலாம். அதிக மழை ஈரம் கிடைப்பதால் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவது இல்லை.

2 சதவிகிதம் சரிவுள்ள நிலத்திலிருந்து ஓராண்டில் சுமார் 10 டன் மண் அரிப்பு மூலம் இழப்பு ஏற்படுகிறது. சத்தான மேல் மண் அரித்துச் செல்லப்படுவதால் முக்கியமான பல பயிர்ச் சத்துக்களும், நுண் சத்துக்களும், அங்ககப் பொருள்களும் அடித்துச் செல்லப் படுகிறது. இதனால் நிலம் வளம் குறைந்து, சாகுபடிக்குப் பயனற்றதாகி, பின்னர் தரிசாக ஆகிறது.

மண் அரிமானத்தைத் தடுக்க சம உயர வரப்புகள் அமைக்கலாம். இதற்கு அதிகம் செலவாகும். ஓரளவு நிலப்பகுதியும், இதனால் வீணாகிறது. இதனை ஆண்டுதோறும் பராமரிக்க வேண்டும். இதற்கும் பெரும் செலவு ஆகிறது.

சரிவான மானாவாரி பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்க வெட்டிவேர் வரிசைகள் அமைக்கலாம். இது ஒரு தாவர அரணாக அமையும்.

வெட்டிவேர் புல்வகையைச் சேர்ந்தது. இதன் நிறைந்த சல்லி வேர்கள் மண்ணில் பாய் போன்று பின்னிப் பிணைந்து மண் அரிமானத்தைத் தடுக்க உதவுகிறது. இது வறட்சி தாங்கி வளரக் கூடியது. ஆடு மாடுகள் இதனை அதிகம் சேதப் படுத்துவதும் இல்லை.

மானாவாரி நிலங்களில் சரிவுக்குக் குறுக்காகச் சம உயர வரிசைகளை முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த வரிசைகளை 40 மீட்டர் இடைவெளியில் அமைத்து, வரிசையில் குத்துக்கு குத்து 10 செ.மீ. இடைவெளியில் வெட்டிவேர் சிம்புகளை நடலாம். ஒரு குத்துக்கு 3 முதல் 4 சிம்புகள் வைத்து நடலாம்.

**தாவரத் தடுப்பான வெட்டிவேரின் பயன்கள்**

1. வறட்சி தாங்கி வளரும் தன்மை கொண்டது.

2. குறுகிய காலத்தில் அதிகச் சிம்புகள் வெடிக்கும் தன்மையுடையது.

3. எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மை உடையது.

4. கோடையில் காய்ந்தாலும் மழைக் காலத்தில் மீண்டும் தழைத்து வளரும்.


5. இதனைப் பூச்சி நோய் தாக்காது.

6. இதன் விதைகளில் முளைப்புத் தன்மை இல்லாததால் தேவையற்ற இடங்களில் முளைத்துக் களைப் பிரச்சினை வராது.

வரிசையில் பழுதான சிம்புகளுக்குப் பதிலாகப் புதிய சிம்புகள் நட்டு, முதல் 3 ஆண்டுகள் பராமரித்தால் நல்லதொரு வெட்டிவேர் தாவரத் தடுப்பு அரண் அமையும். இந்த அரண், பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்கும். வழிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைத்து, மண் துகள்களை வடிகட்டி, நீரை மட்டும் மெதுவாக விடும். இதனால் மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மழை நீர் சேமித்து வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

● கிழக்கிந்தியக் கம்பெனியாரால், 1,70,000 ரூபாய்க்கு மதுரை விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர், முகமது யூசுப் என்பவருக்கு 5,00,000 ரூபாய் ஆண்டுக் குத்தகைக்கு விடப்பட்டது. அதுவும் கி.பி. 1790-ல் முடிவு பெற்றது. கி.பி. 1801-ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டது மதுரை.

# அறிவொளி இயக்கம்




மதுரை மாவட்டம்;

மதுரை மாநகரில் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலும், மாநகர ஆணையாளர் அவர்களின் மேலான ஆதரவுடனும், கூடுதல் ஆட்சியாளர் அவர்களின் வழிநடத்துதலுடனும், அரசு சார்ந்த அலுவலர்களும், பொதுமக்களும், மாணவ மாணவியர்களும், கல்வி நிறுவனங்களும் இணைந்து நடத்திய அறிவொளி இயக்கம் சிறப்பாக நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து அறிவொளி வளர்கல்வி இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை மாநகரில் மட்டும் கணக்கெடுப்பின்படி கல்லாதவர்களின் எண்ணிக்கை மொத்தம் 61,807 பேர். இதில் ஆண்கள் 23,791 பேர். பெண்கள் 38,016 பேர். குறிப்பாக- தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கல்லாதவர்களின் எண்ணிக்கை மட்டும் மொத்தம் 14,372 பேர். இதில் ஆண்கள் 5,971 பேர். பெண்கள் 8,401 பேர்.

மாநகரில் அறிவொளியின் தாக்கம் மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவி மக்களின் வாழ்க்கையுடன் இணைந்த் ஒன்றாகிவிட்டது.

அறிவொளி இயக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக மாநாடுகள், கலைக்குழுக்கள், மூன்று இரத்ததான முகாம்கள், மனிதச்சங்கிலி, ஊர்வலங்கள், சைக்கிள் பேரணி, அறிவொளி கார்த்திகை விழா, அறிவொளிப் புத்தாண்டு தினம், அறிவொளி ஆசிரியர்தினம், அறிவொளி கிறிஸ்துமஸ் விழா, அறிவொளி கண்காட்சிகள், அறிவொளி மரம் நடும் விழா ஆகியவை மாநகர்ப் பகுதியில் சிறப்பாக நடத்தப்பட்டது. இரத்ததான முகாம்கள் நடத்தியமைக்காக டாக்டர். சிவக்குமார் கோப்பையும், டாக்டர். ராமசுப்பிரமணியம் கோப்பையும், டாக்டர். அன்பழகன் சுழற்கோப்பையும் மதுரை மருத்துவக் கல்லூரியால் வழங்கப்பட்டுள்ளது.

வெள்ள நிவாரணப்பணி, இலவச வேட்டி, சேலை வழங்குதல் ஆகிய பணிகளில் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இருந்து, அவர்களின் சுகாதார உடல்நலம் காப்பது வரை, அறிவொளி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தீவிரமாகச் செயலாற்றி வருகின்றனர். மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்தப்பெற்றன. மருத்துவக் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் உதவியுடன் ''எயிட்ஸ்'' விழிப்புணர்வு முகாம், குடியின் தீமைகளை விளக்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. நான்கு கண் சிகிச்சை முகாம்கள் அரவிந்த் கண் மருத்துவமனை உதவியுடன் நடந்தேறியுள்ளது. இதில் சுமார் 750 பேர்களுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டது. 50 பேருக்கு அறுவைச் சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்தை வலியுறுத்தும் வகையில் மகளிர் மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

மக்களின் வாழ்க்கையில் அறிவொளி மாற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக- மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் 1,500 பேர் இப்பொழுது ''கைநாட்டு'' என்ற அவல நிலையிலிருந்து விடுபட்டுப் பெருமையுடன் வங்கிகளில் கையொப்பமிட்டுச் சம்பளம் பெறுகின்றனர். பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் பனைமரம் ஏறும் தொழிலாளிகள், செங்கல் சூளையில் பணிபுரிபவர்கள், ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்கள், உணவு விடுதித் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், காய்கறி வியாபாரிகள், பட்டறையில் பணிபுரிபவர்கள், நெசவாளர்கள், பூ கட்டுபவர்கள், பாய் முடைபவர்கள்,

அப்பள நிறுவனங்களில் பணிபுரியும் சிறுவர்கள், சிறுவர் சிறைச் சாலையில் உள்ள இளம் குற்றவாளிகள், திரையரங்கச் சிற்றுண்டி விடுதித் தொழிலாளர்கள், பூங்கா பணியாளர்கள் ஆகியோர் அறிவொளியில் கற்று மதிப்பீட்டுத் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர். தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துமுகமாக அறிவொளி மையங்களில் கற்போர்கள் ஜாதி, மத பேதமின்றி கற்றது சிறப்பம்சமாகும்.

அறிவொளியில் கற்றவற்றை மறக்காமல் இருப்பதற்கும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வளர்கல்வியாக அறிவொளி செயல்படுகிறது. நான்கு அறிவொளி மையங்கள் இணைந்து வளர்கல்வி வட்டமாக மாறியுள்ளன. அன்றாடச் செய்திகளை மக்கள் உணரும் வண்ணம் ''அறிவொளிச் சுவர்கள்'' அமைத்து, கற்போர்களைக் கொண்டே சுவர்களில் எழுதச் செய்வதன் மூலம் படிப்பதிலும், நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வமூட்டப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அறிவொளி நூலகங்களை அமைத்து, கற்போருக்குத் தொடர்ந்து படிக்க வழி வகை செய்யப்படுகிறது. ''தென்றல்'' பத்திரிகை இவ்வியக்கத்தின்கீழ் கற்போர்களுக்காகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.



**தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் சிலை.**

அறிவொளியில் தீபம் 1,2,3, ஆகிய மூன்று புத்தகங்களை முடித்து, வளர்கல்வியில் படிக்க வேண்டியவர்களின் எண்ணிக்கை மொத்தம் 22,194 பேர். இதில் சுமார் 6,000 பேர் வளர்கல்வியில் இணைந்து 317 வட்டங்களில் கற்று வருகின்றனர். மீதமுள்ளவர்களும் இதில் பங்கேற்கக் கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


வளர்கல்வி வட்டங்களை நடத்துவதற்குச் சுமார் 1,000 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டவழிகாட்டிகள் எந்த விதப் பலனும் எதிர்பார்க்காமல் தொண்டாற்றி வருகிறார்கள். இவர்கள் சுகாதாரம், சிறுதொழில், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, சிறு சேமிப்பு, சிறுகுடும்பம் போன்ற விழிப்புணர்வு நடைமுறைக் கருத்துக்களை வட்டங்களில் கற்பித்து வருகின்றனர்.

''இந்தியாவிலே முதலாவதாக அறிவொளி துவக்கப்பட்ட மாநகர்'' என்ற பெருமை மதுரை மாநகரையே சாரும். ஒவ்வொரு மனிதனும் சுயசார்புள்ள மனிதனாக மாற வேண்டும் என்பதே வளர்கல்வியின் முடிவான நிலையாகும்.

## மது(ை)ரச் செய்தி



**''இதுபோன்ற குடிசையிலிருந்த எனக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். நகரில் அதோ அப்படியொரு அழகிய வீட்டை இலவசமாகக் கட்டித் தந்துள்ளது அரசு'' என்று சொல்லிப் பூரிப்படைகிறார் இந்தப் பெண்மணி.**



# நீலகிரி நிலச்சரிவு: மத்திய நிபுணர்கள் பார்வையிட்டனர்.

**மாண்புமிகு** முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14.11.93 அன்று நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவினையும், அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டார். உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கி, அலுவலர்களுடன் ஒரு கூட்டம் நடத்தியபின், சென்னைக்கு வந்தவுடன், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்தும், அங்கு ஏற்பட்டுள்ள பொருட்சேதங்கள் மற்றும் உயிர்ச்சேதம் குறித்தும் ஒரு விரிவான கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் தமிழக முதல் அமைச்சர் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுச் சேதங்களை நீக்கி, மீண்டும் ஊட்டி மலைப் பாதையை விரைவில் செப்பனிடவும், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலச்சரிவுகள் ஏற்படாதிருக்க எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயவும், தகுந்த செயல் திட்டங்களை வகுக்க மாநில அரசிற்கு உதவும் பொருட்டு எல்லைச் சாலைகள் நிறுவனம், மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிலையம், இந்திய புவியியல் ஆய்வு, ஆகிய மூன்று நிறுவனங்களிலிருந்தும் உயர் அதிகாரிகளை நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து எல்லைச் சாலைகள் நிறுவன இயக்குநர் ஜெனரல் லெப்டினட் ஜெனரல் மகராஜ் சிங் தலைமையில், எல்லைச் சாலைகள் நிறுவனத் துணை இயக்குநர் ஜெனரல் பிரிகேடியர் எஸ்.பி. ஜோஷி, மத்திய தரை வழிப் போக்குவரத்து அமைச்சகத் தலைமைப் பொறியாளர்கள் திரு.



பி.கே. தத்தா மற்றும் பி.ஆர். ரிஜ்வானி, மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனத் துணை இயக்குநர் பி.டி. ராவ், இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த இயக்குநர் திரு. ஏ.கே. பண்டாரி ஆகிய 6 உயர் அதி காரிகள் அடங்கிய குழு தனி விமானம் மூலம் 15-ஆம் தேதியன்று கோவை மாவட்டத்திற்கு அனுப்பப் பட்டது. அங்கிருந்து அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் சென்று நீலகிரியில் ஏற்பட்ட நிலச்சரி வினைப் பார்வையிட்டனர். பிறகு ஜீப் மூலம் சென்று நிலச்சரிவுச் சேதங்களைப் பார்வையிட்டு, கோவை திரும்பினர்.

அந்தக் குழுவினர் 16.11.93 அன்று காலை தனி விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்; சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆலோசனையின் பேரில் அமைச் சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட் ராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. வி. சுந்தரம், வருவாய் நிர்வாக சிறப்பு ஆணை யாளர் திரு. சி.என். ராமதாஸ், பொதுத்துறைச் செயலாளர் திரு. பி. பாஸ்கரதாஸ், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த உயர்ந்த அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆலோசனை நடத்தினார்கள்.

இந்தக் கூட்டம் குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதாவது:

எல்லையோரச் சாலைகள் நிறு வனத்தின் டைரக்டர் ஜெனரல் லெப்டினனட் ஜெனரல் மகராஜ் சிங், இந்த மிகப்பெரிய நிலச்சரி விற்குக் காரணம்- ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து பெய்த அடை மழையும், மழையால் ஏற்பட்ட வெள்ளத்திற்கு வடிகால் கிடைக்காத தும்தான் என்ற கருத்தை ஆய்வுக்குப் பின்னர் இந்தக் கூட்டத்தில் தெரி வித்தார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் பல வேறு சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த பின்னர் மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் வரையிலும் உள்ள மலைப் பாதையில் ஏற்பட்டுள்ள சேதங் களைக் குறுகிய காலத்திற்குள் போர்க்கால அடிப்படையில் சரி செய்து கார் போன்ற சாதாரண வாகனங்களை மட்டும் செல்ல அனு மதிக்கலாம் என்று முடிவு செய்யப் பட்டது.

இந்தப் பாதையை எல்லாவித மான வாகனங்களும் செல்லும் அள விற்குப் பழைய நிலைக்குக் கொண்டு வர, புவியியல் ஆய்வு நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்ட பின்பு அதன் அடிப்படையில் மேற் கொள்ளலாம் என்ற கருத்துத் தெரி வித்துள்ளார்.

மலைப்பாதையில் சேதம் ஏற் பட்ட பகுதிகளைச் சரிசெய்து பாதையைச் சற்று மாற்றி அமைத்துச் சீர்செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதையும், தொழில்நுட்ப வல்லுநர்கள் சுட்டிக்காட்டி உள் ளார்கள். இந்த மலைப்பாதையை உடனடியாகச் சீர்செய்வதற்கு எல்லைச் சாலைகள் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையையும், அந்த நிறுவனத்தைச் சார்ந்த வல்லு நர்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு மிக விரைவில் சீர்செய்வது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

---

**அண்ணா போற்றிய பெருமக்கள்:**

## மூதறிஞர் இராஜாஜி



திருக்குறளுக்கு அவர் உரை எழுதி யிருக்கிறார். அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது. அந்தத் தனித் தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்த்த மதி தான்.

அவரது சிந்தனையும் செயலும் மார்க்க அரேலியரைப் பின் பற்றியவை ஆகும்.

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பது யாதெனில் - மக்கள் எல்லா ரையும் சிந்திக்கும்படி அவர் செய்திருக் கிறார் என்பதேயாகும்.

இதுவே, இராஜாஜி தமது வாழ்க்கை யில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது ஆகும்.

உலக அமைதிக்காக அவர் அயல் நாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

அணுக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்திருந்த அமெரிக்க நாடு சென்று, அந்நாட்டின் அதிபர் கென்னடியைச் சந்தித்தார்.

உலகுக்கு அமைதி வேண்டும் என் பதற்காக அந்தப் பயணத்தை மேற் கொண்டவர் - 'இந்தியாவிலிருந்து சென் றவர்' என்பது இந்த நாட்டினுக்குப் பெருமைமிகு அத்தியாயமாக விளங்கும்.

இராஜாஜி ஆற்றிய பணி அத் தகையது. அந்தக் காரியத்துக்கு ஈடான பெருமை மிக்கது - அவரது வாழ்க்கை வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.



# கூட்டுறவுக் குடையின் கீழ் ஒரு குதூகலப் பயணம்!

ஆண்டுதோறும் நவம்பர்த் திங்களில் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு 40-வது அ.இ. கூட்டுறவு வார விழா நடைபெறுவதையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பத்திரிகையாளர் பயணம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

நவம்பர்த் திங்கள் 10-ஆம் நாளன்று, சென்னை நகரில் உள்ள சில முக்கிய கூட்டுறவு நிறுவனங்களை நேரில் சென்று பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்குமுன், இந்த வார விழாவின் முக்கிய நோக்கத்தைத் தெரிந்து கொள்வோம்.

40-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழா, பண்டித நேரு அவர்கள் பிறந்த நாளையொட்டி நவம்பர்த்திங்கள் 14 முதல் 20 வரை தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இக் கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கம், கூட்டுறவு இயக்கத்தின் கடந்த ஆண்டு சாதனைகளை மதிப்பீடு செய்வதோடு, வரும் காலத்திற்கான செயல் திட்டங்களை வகுப்பதுடன் மக்கள் மனதிலே கூட்டுறவு இயக்கத்தின் மீது ஈடுபாடு ஏற்படுத்துவதற்காகும்.

மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் சார்பில் 14.11.93 அன்று திருசிசியில் கூட்டுறவு வார விழாவின் தொடக்க நாள் விழாவும், 20.11.93 அன்று காஞ்சிபுரத்தில் கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் விழாவும் நடைபெற்றது.

கூட்டுறவு வார விழாவினையொட்டி, மாவட்டங்களில் ஏழை மக்களுக்கு இலவசமாகக் கண்சிகிச்சை அளிக்கப்பட்டது. இலவசமாக அரசு மற்றும் பொது மருத்துவ மனைகளின் உதவியுடன் கண் கண்ணாடிகள் வழங்குதல் கண்களைத் தானமாக வழங்குவோரைப் பதிவு செய்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரசு மற்றும் பொது நல மருத்துவ மனைகளின் உதவியுடன் பலதரப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள், தன்னிச்சையாக இரத்ததானம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் கூட்டுறவு வார விழாக்களின் போது கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தினால் ஏழை மக்களும், விவசாயிகளும் வளர்க்கின்ற கால்நடைகள் பயன் பெறுகின்றன.

முதலாவதாக 'இம்ப்காப்ஸ்' என்னும், நிறுவனத்தைப் பார்ப்போம்:

## இம்ப்காப்ஸ்

இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்து செய் நிலையம் மற்றும் பண்டக சாலை (இம்ப்காப்ஸ்), 6.7.1944-இல் பதிவு செய்யப்பட்டு 12.9.1944-இல் பணியாற்றத் தொடங்கியது. வெள்ளி விழா நிறைவு பெற்ற இச்சங்கம் விரைவில் பொன் விழாவினைக் கொண்டாட இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தலைமையகம், 9 ஏக்கர் பரப்பளவில் நிர்வாகக் கட்டடம் மற்றும் தொழிற் கூடங்களுடன் அமைந்துள்ளது. இதைத் தவிர ஆந்திர மாநிலம் தாடேப்பள்ளியில் மண்டல மருந்து செய் நிலையமும், விஜயவாடாவில் மண்டல நிர்வாகம் மற்றும் விற்பனை நிலையமும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சித்தா ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவத் தொழிலின் பதிவு பெற்ற மருத்துவர்கள் சுமார் 9000 பேர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுடைய தேவைக்கு ஏற்ப மருந்துகளை இந்நிலையம் செய்து வழங்கி வருகின்றது. இதைத் தவிர தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் நிறுவன உறுப்பினர்களும், (பஞ்சாயத்து யூனியன், நகராட்சி மற்றும் பேருராட்சிகள்) பயனடைந்து வருகின்றார்கள். உறுப்பினர்கள் மற்றும் வாங்குவோரின் வசதிக்காக மருந்து விற்பனை நிலையங்கள் அண்ணா சாலை, சென்னை, மதுரை, தஞ்சாவூர், சேலம், திருச்சி, பெங்களூர், ஐதராபாத், கோயம்புத்தூர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றது.

தமிழக அரசின் கீழ் இயங்கிவரும் தலைமை மருத்துவ மனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும்



சித்தா மருத்துவ மனைகளுக்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் சுமார் 400 மருந்துப்பெட்டகங்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. ஆரம்ப காலத்தில் சுமார் ரூ.20,000-க்கு விற்பனை செய்து வந்த இச்சங்கம் கடந்த ஆண்டில் மூன்று கோடியே ஐம்பத்து ஏழு இலட்சம் என்ற அளவில் விற்பனையைப் பெருக்கி வந்துள்ளது.

பிணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள ஒரு புற நோய்ப்பிரிவும், அக நோய்ப்பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

எல்லா நோய்களுக்கும் புறநோய்ப் பிரிவில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவ மனையில் புற மருத்துவத் துறைக்கு தினசரி 50 நோயாளிகள் வந்து செல்கின்றனர். இவர்களில் அநேகர் தங்கி மருத்துவம் பெற வேண்டியவர்களாக இருக்கின்றனர். பொது மக்களின் நலன்கருதி ரூ.10 இலட்சம் செலவில் இந்த வளாகத்திற்குள்ளேயே மருத்துவ மனை ஒன்று கட்டப்படவிருக்கிறது.

தற்போது மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் கூட இம் மருந்துகளுக்குத் தேவை எழுந்துள்ளது. மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்ற 'எய்ட்ஸ்' நோயினால் விளையவிருக்கின்ற பேரழிவினைத் தடுக்க முடியும் என்கிற உறுதியோடு, இவர்கள் உருவாக்கிய மருத்துவக் கோட்பாடு, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆய்வில் இருக்கின்றது.

## என்கோபெட்

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோபெட்) 1972-ஆம் ஆண்டு 19 மாவட்ட அளவிலான சங்கங்களும் மற்றும் மாவட்டங்கள் முழுவதும் 187 வட்டார அளவிலான விவசாய மையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு மாநில அளவிலான கூட்டுறவு இணையமாக அமைக்கப்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நிறுவி அனைத்து வேளாண்மைப் பொறியியல் சேவைகளை விவசாயிகளுக்குச் செய்வதே இவ்விணையத்தின் முதன்மையான நோக்கமாகும்.

• நோய் இல்லை என்று மனதில் உறுதி செய்; மனம் போல் உடல் அமையும்.

—பாரதியார்



வேளாண் கருவிகளை வாடகைக்கு விடுவது மற்றும் பயிர்ப் பாதுகாப்பு கருவிகளை விநியோகம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொண்டு இம்மையங்கள் விவசாயிகளுக்குப் பணியாற்றி வருகின்றன.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.187 இலட்சம் மதிப்புள்ள 5,113 விசைத் தெளிப்பான்கள் மற்றும் ரூ.445 இலட்சம் மதிப்புள்ள 45,009 கைத் தெளிப்பான்கள் அரசுத் துறைகள் மற்றும் மாவட்ட, வட்டார வேளாண்மைப் பொறியியல் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.31.46 இலட்சம் மதிப்புள்ள பைப்புகள், உதிரிப் பாகங்கள், டயர் மற்றும் டியூப்புகள் வழங்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.55 கோடி மதிப்புள்ள உரங்கள் வழங்கப்பட்டன.

பஞ்சாயத்துக்கள், மற்றும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நல்ல சிறப்பான சாலைகள் அமைத்துத் தரும் பணிக்கென இணையம் 6 சாலை உருளைகளைக் கொண்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு முதல் இணையத்தின் 6 சாலை உருளைகளும் சாரசாரியான ரூ.2.25 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஈட்டியுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு சாலை உருளைகளை வாடகைக்கு விடுதல் மூலம் ரூ.5.50 இலட்சம் ஈட்டியுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.37.39 இலட்சம் மதிப்புள்ள 170 ஆழ்துளைக் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலம் தோண்டப்பட்டுள்ளன.

டி.ஏ.பி., எம்.ஒ.பி. மற்றும் காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களை சலுகை விலையில் விநியோகிப்பதற்காக இணையம் முதல் தவணையாக ரூ.61.21 இலட்சங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு 1992-93-இல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இரண்டாவது தவணையாக ரூ.139 இலட்சங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் டயர் வண்டிகள் விநியோகம் செய்ய ரூ.3 கோடி அரசு மானிய தொகை வழங்கி உள்ளது. இணையம் இத்திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது. முதல் முறையாக 24.2.93 அன்று செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள முத்தையால்பேட்டை கிராமத்தில் 18 டயர் வண்டிகளை விநியோகம் செய்துள்ளது.

## டான்பெட்

'டான்பெட்' என அனைவருக்கும் அறிமுகமாகியுள்ள, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மாநில அளவிலான ஓர் உழவர் நிறுவனம் எனும் வகையில் உழவர்கட்குத் தேவைப்படும் வேளாண் இடுபொருட்களை வழங்குதல் மற்றும் வேளாண் விளைபொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்தல் ஆகிய அரும்பணிகளை இந்நிறுவனம் ஆற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 122 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் செயல்பாடுகளை இணைக்கும் இந்நிறுவனம் மாவட்டங்களில் அமைந்துள்ள தனது 15 மண்டல அலுவலகங்கள் மூலமாக தனது பணிகளை செயல்படுத்தி வருகிறது.

மன்னார்குடிக்கு அருகே பாமணி எனும் கிராமத்தில் தினசரி 120 டன் தயாரிப்பு சக்தி கொண்ட 'என்.பி.கே.' மணி உரம் தயாரிக்கும் தொழிற்சாலை இவ்விணையம் 1970-ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது. இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உரம் 'பாமணி 17:17:17 என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. பயிர்களுக்கு நோய்வராமல் தடுக்கும் நோக்கில் வேப்பம் பிண்ணாக்கு கலந்து இம்மணியுரம் தயார் செய்யப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்கள் விதைகள் மற்றும் விவசாயக் கருவிகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் கிடைக்கும் வண்ணம் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

வங்கிகளில் 'சிறப்பங்காடி' பிரிவு ஏற்படுத்தி அவை செவ்வனே செயல்பட 'டான்பெட்' வழிவகை செய்துள்ளது. 100 விவசாயக் கூட்டுறவு சிறப்பங்காடி களுக்கும் பாலிபெல்லட்ஸ், பெயர்ப் பலகை, விலைப்பட்டியல் பலகை, விளம்பர பானர்கள், மர அடுக்குகள், சைக்கிள்கள் மற்றும் விற்பனையாளர் களுக்குரிய சீருடைகள் ஆகியவற்றையும் இணையம் வழங்கியுள்ளது. விற்பனை யாளர்களுக்குப் பயிற்சி அளித்து அதன் மூலம் விவசாயிகளுக்குச் சிறந்த சேவை கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை நிறுவனமான இணையம் வேளாண் விளைபொருட்களான பருத்தி, மிளகாய், தனியா, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் கொள் முதலில் விவசாயிகளுக்கு உறுதுணையாக நின்று இணைந்த சங்கங்களுடன் சேர்ந்து முகவர் அடிப்படையிலும், இணை கொள்முதல் அடிப்படையிலும் மற்றும் நேரிடைக் கொள்முதலிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. தேசியப் பஞ்சாலைக் கழகத்திற்குத் தேவையான பஞ்சுக் கொள்முதல் செய்தல், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட 10,000 பேல்கள் பஞ்சு ஏற்றுமதிக்கான பஞ்சு கொள்முதல் செய்தல், மற்றும் 'சௌத் இந்தியா விஸ்கோஸ்' நிறுவனத்திற்காக சூரிய காந்தி விதைகள் கொள்முதல் செய்தல் போன்ற கொள்முதல் பணிகளை இணை யம் செய்து வருகிறது. ஏற்றுமதி அள வான 10,000 பேல்கள் பஞ்சு கொள் முதலில் இணையம் இதுவரை 185.12 இலட்சம் மதிப்புள்ள 2969 பேல்களை நேபாளத்திற்கும், சிங்கப்பூருக்கும் கொள் முதல் செய்து அனுப்பியுள்ளது.

தமிழ்நாடு அரசினால் பரிந்துரை செய்யப்பட்டு தேசியக் கூட்டுறவு வளர்ச் சிக் கழகத்தின நிதியுதவியுடன் 2,500 மெ.டன் கொள்ளளவு உள்ள புதிய குளிர்பதனக் கிடங்கினை இணையம் கோயம்பேட்டில் நிர்மானித்து வருகிறது. மொத்தம் ரூ.167.59 இலட்சம் மதிப்பு உள்ள நிர்மானத் திட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து இதுவரை பெறப்பட்ட நிதியுதவி ரூ.71.328-இல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து கையகப் படுத்தப்பட்ட 16 மனை நிலத்தில் அடித்தளம் வரை கட்ட முன்னேற்றம் உள்ளது.


பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் பணியில் இவ்விணையம் தன்னை ஈடு படுத்திக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நவம்பர் திங்கள் 1905-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 87 ஆண்டுகள் தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரும்பணி ஆற்றிவருகிறது.

தமிழகத்தில் பசுமைப் புரட்சிக்கு இவ் வங்கி முக்கியப் பங்காற்றியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும். குறுகிய கால மத்தியக் காலப் பயிர்க் கடன்கள் வழங்குவதோடு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களுக்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் நிதியுதவி அளித்துப் பெரும்பணி ஆற்றிவருகிறது.

தமிழகத்தில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட பொது விநியோகக் கடைகளை நடத்துவதற்கு நிதி வசதிகளை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கி, தமிழக அரசின் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெற எங்களது வங்கி பெரிதும் உதவியாக இருந்து வருகிறது.



● நம்பிக்கையைப் பிறர் தரமுடியாது; அது உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்


இவ் வங்கி, மாநில அளவில் உள்ள சங்கங்களான, தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு அத்தியா வசியப் பண்டங்கள் விற்பனைச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துச் சாகுபடியாளர் இணையம், தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், தமிழ்நாடு சிறுதொழில் கழகம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் போன்ற நிறுவனங்களுக்கும் தனது சொந்த நிதி யிலிருந்து நடைமுறை மூலதனமாக நிதி வசதி அளித்து வருகிறது.

மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிகர இலாபத்தில் ஐந்து சதவிகிதம் ஆண்டுதோறும் ஒதுக்கி 1990-91 முதல் கிராமக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஒன்றினை ஏற்படுத்தி இன்றைய தேதியில் ரூ.194.48 இலட்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் எந்தவொரு மாநில வங்கியும் செயலாற்றாத ஒரு சிறப்புமிக்க செயலாகும் இது. இந்த நிதி கிராமச் சங்கங்களின் வளர்ச்சிக்காகப் பயன் படுத்தப்படும்.

கடந்த ஆண்டு (31.3.1993) இல் வங்கி, ரூ.15.39 கோடி நிகர இலாப மாகப் பெற்று அகில இந்திய அளவில் முதலாவதாகத் திகழ்கிறது. இதே போன்று கடந்த சில ஆண்டுகளாக அதிகபட்சம் 14 சதவிகித ஈவுத் தொகை யாகப் பங்குதாரர்களுக்கு வழங்கி, அகில இந்திய அளவில் முதலாவதாகப் பணி யாற்றி வருகிறது.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழக அரசின் குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கொள்கையினைக் கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் தலைமை நிறுவனம்தான், வருகிற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணை யம். இந்த இணையம் 18.3.1959-இல் பதிவு செய்யப்பட்டு 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.



தமிழகம் முழுவதிலும் உள்ள 625 முதன்மைச் சங்கங்களின் வழியாகப் புது வீடு கட்டுவதற்கு ரூ.2 இலட்சம் வரை, உயர்ந்த பட்சம் 20 ஆண்டு அளவில் திருப்பிச் செலுத்தக் கூடிய நீண்ட காலக் கடன் வழங்கிவருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும், பேரூர்களும், சிறறூர்களும் முதன்மைச் சங்கங்களின் செயல் எல்லையால் (Area of operation) இணைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் எந்த மூலை, முடிக்கிலிருந்தாலும், தனி மனிதன் ஒருவர் வீடு கட்ட விரும்பினால், அவரால் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் கடன் பெற இயலும். நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் 460 நகர்ப்புற பகுதிகளிலும், வட்ட வீட்டு வசதிச் சங்கங்கள் 165 கிராமப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

வருவாய் குறைவாக உள்ள (மாத வருமானம் ரூ.1,250-க்கு மேற்படாதவர்கள்) கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு பின்வரும் நிதி உதவிகளை இணையத்தின் மூலம் வழங்குகிறது.

1. வீடு கட்ட கடன் கோரும் ஒவ்வொருவருக்கும் மானியத் தொகையாக ரூ.1,500 வழங்கப்படுகிறது.

2. 1990-91 முதல் வழங்கப்படும் கடன் தொகை ரூ.7,000-க்கு கடன் பெற்ற உறுப்பினர் மாதந்தோறும் கட்ட வேண்டிய தவணைத் தொகை ரூ.60 ஆகும். இதில் ரூ.30-ஐ மட்டுமே திருப்பிச் செலுத்தினால்போதும். மீதிப் பாதியை அரசே செலுத்திவிடும். இந்த வகையில் வீடு கட்டக் கடன் பெற்ற ஒருவருக்கு:—

1. ரொக்கமாக வழங்கும் அரசு மானியம் ரூ.1,500.

2. தவணைத் தொகையில் பாதியைத் திருப்பிச் செலுத்தும் வகையில் மானியம் ரூ.3,500 - கூடுதல் 5,000.

இதேபோல மலைப்பகுதிகளில் வீடு கட்டுவோர் அடையக்கூடிய மொத்த அரசு மானியத் தொகை ரூ.6,000 ஆகும். மேற்கண்ட சலுகைகள் தவணைத் தொகையைத் தவறாது மாதந்தோறும் திருப்பிச் செலுத்துவோருக்கு கிடைக்கும் என்பது கவனத்திற்குரியது.

கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டு (SHUPRA) திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம்படுத்துவதற்காக ரூ.3,080 வழங்கப் படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற காரியங்களுக்கு கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

## கோ ஆப்டெக்ஸ்

'கோ-ஆப்டெக்ஸ்' என்ற பெயரில் புகழ்பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்யும், கூட்டுறவுத் துறையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கவும் ஆன முக்கிய குறிக்கோளுடன் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் முக்கிய கச்சாப் பொருள்களைக் (நூல், சாயம், பட்டு, சரிகை) கொள்முதல் செய்து வழங்குவதும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் உறுப்பினர்களான நெசவாளர் சங்கங்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதும் இச்சங்கத்தின் முக்கியப் பணிகளாகும்.

கைத்தறி பாலியஸ்டர் உள்ளிட்டு எல்லா வகையான கைத்தறித் துணிகளையும் கோ-ஆப்டெக்ஸ் வியாபாரம் செய்கிறது. தூய பட்டுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ் பெற்றுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் பட்டுத் துணிகள் 100 சதவிகிதம் தூய பட்டு அசல் சரிகையாகும்.

1991-92-ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூபாய் 172.27 கோடியாக இருந்தது 1992-93-ஆம் ஆண்டில் விற்பனை ரூ.195 கோடியாக உயர்ந்தது. 1992-93-இல் கோ-ஆப்டெக்ஸ் ரூ.3.40 கோடி இலாபம் ஈட்டியது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். 1993-94-க்கு ஆண்டுக் குறியீடு ரூ.232 கோடியாகும்.

நாடு நெடுகிலும் அமைந்துள்ள 434 விற்பனை நிலையங்கள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகளை விற்பனை செய்கிறது. தமிழகத்தில் 269 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் வெளி மாநிலங்களில் 165 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் பொது மக்களின் துணித் தேவைகளை நிறைவு செய்கின்றது.

பட்டுச் சேலைகளுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ் பெற்றது. காரணம் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் பிரத்யேகமாக அமைந்துள்ள பட்டு விற்பனை நிலையங்களேயாகும்.

நெசவாளர்கள் நலனுக்காக அட்கோ உதவியுடன் நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மானிய விகிதங்களில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றது. இதுவரை ரூ.12.93 கோடி மதிப்பில் 11,067 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1992-ஆம் ஆண்டு பொங்கல் முதல் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் 1994 பொங்கலுக்கு 60 இலட்சம் ஆண்கள், 60 இலட்சம் பெண்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கப்படவிருக்கிறது. இதற்குரிய வேட்டி சேலைகளைக் கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

கூட்டுறவு தொடர்பான பல ஆக்கப் பூர்வமான செய்திகளைத் தெரிந்து கொள்வதிலே மனநிறைவடைகிறோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வும், அதன்மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட வழியேற்பட வும் நடைபெற்ற கூட்டுறவு வார விழா உதவியது என்றால் அது மிகையல்ல!

— பி.வி. கிரி

● ● ●

கூட்டுறவு வார நிறைவு விழா காஞ்சிபுரத்தில் நடை பெறுவதை யொட்டி, 20.11.93 அன்று, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒருநாள் பத்திரி கையாளர் பயணத்துக்கு ஏற்பாடு செய் திருந்தது. அதன் விவரம் வருமாறு:

பூவிருந்தவல்லி கூட்டுறவு பிரதம நிலவள வங்கி 1927-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது; பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் ஊராட்சிகளில் உள்ள ஏழை- நடுத்தர மக்கள் இதனால் பெரும் பயன்பெற்று வருகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லு வதானால் 253 கிராமங்களுக்கு இதன் உதவிக்கரம் நீளுகின்றது.

''சிறு விவசாயிகளுக்கு ஆடுமாடு வாங்கக் கடன் தருகிறோம். பெரும் விவசாயிகளுக்கு டிராக்டர் போன்றவை வாங்கக் கடன் தருகிறோம்; இதுவரையில் 90 பேருக்குப் பண்ணைசாராக் கடன் தந்திருக்கிறோம்...'' வாங்கிச் செயலாளர் திரு. எம். மகாதேவன்.

**நசரத்பேட்டை**

ஸ்ரீபெரும்புதூர் விவசாயப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு வங்கி, நசரத் பேட்டையில் 1946-ல் தொடங்கப்பட்டி ருக்கிறது. இதில் சுமார் 7,000 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த வங்கி மூலம் 237 நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1992-93-ல், இவ்வங்கி ஈட்டிய லாபம் 4.15 இலட்சமாகும்.

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியானது 1915-ல் துவங்கப்பட்ட தாகும். செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுமைக்குமாக நிழல்தரும் வங்கி இது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும், அரசு மூலமும் இந்த வங்கி பெற்றுள்ள பங்குத் தொகை ரூ.536.17 இலட்சமாகும். திரு. அ. ஜின்னா இவ் வங்கியின் இணைப்பதிவாளராக இருந்து வருகிறார்.



தமிழ்நாட்டில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளிலேயே இந்த ஆண்டில் இதுவே தலைசிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

''இந்த வங்கிக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடமொன்று கட்டப் பட்டு வருகிறது; அந்தக் கட்டடத்திற்கு இடம் மாறிய பிறகு, இதை முழுக்க முழுக்கப் பெண்களே நிர்வகிக்கும் வங்கி யாக மாற்றிவிட இருக்கிறோம். எங்களிடம் கடன் பெறுவோரில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகளாகவோ அதிலும் குறிப்பாகப் பெண்களாகவே இருக் கிறார்கள்'' என்கிறார், இணைப் பதிவாளர்.

**பிள்ளையார் பாளையம்**

மூவேந்தர் பட்டு மற்றும் பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் துணி நூல் கட்டுப்பாடு அலுவலர் ரகுநாதன், இச்சங்கம் 1947-ல் தொடங்கப்பட்ட தாகவும், இதில் 806 பேர் உறுப்பினராக இருப்பதாகவும் கூறினார்.

கடந்த ஆறுமாத காலமாகவே இங்கு பட்டு நூல் உற்பத்தி நடக்கிறது; பெரிதும் லுங்கித் தயாரிப்பே இங்கு அதிகம். 333 தறிகளை உடைய இந்தச் சங்கத்தின் மூலம் 92-93-ல் ரூ.57 இலட்சம் அள விற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**காஞ்சிபுரம் பட்டு**

காஞ்சிபுரம் நகரில் உள்ள- காஞ்சி புரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு மார்கெட்டிங் சொசைட்டி லிமிடெட் 1955-ல் தொடங்கப்பட்ட தாகும். நடப்பு ஆண்டில் இதில் 985 பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

இங்கே ரூ.500 முதல் ரூ.15,000 வரை பெறுமானமுள்ள சரிகை ரவிக் கைத் துண்டோடு பட்டுச் சேலைகளும், பட்டுப் பாவாடைகளும் விற்கப்படுகின்றன.

''எங்கள் சங்கம் முப்பத்தெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது; இதனாலேயே சிறந்த பட்டு கூட்டுறவு சங்கம் என்று எங்களுக்கு பாராட்டுக் கேடயம் வழங்கியுள்ளது அரசு'' என்று மகிழ்வோடு தெரிவித்தார், இவ்வமைப்பின் துணி நூல் கட்டுப்பாடு அலுவலரும் தனி அலுவலருமான திரு. ஏ.ஏ. தால்.

## கூட்டுறவு வார நிறைவு விழா

தமிழகத்தில் 14.11.93 முதல் தொடங்கிய கூட்டுறவு வார விழா, 20.11.93 அன்று நிறைவுற்றது.

முறையே இவ்விழாவானது- செங்கற் பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருப்போரூர், பெருநகர், திருக்கழுக் குன்றம், மேற்குத் தாம்பரம், பொன்னேரி, கடம்பத்தூர் ஆகிய ஊர் களில் நடைபெற்றது.

நிறைவு விழா, காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா கலையரங்கத்தில் 20.11.93 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழா தொடங்குமுன்பாக மாணவ மாணவியர் பங்கேற்ற ஊர்வலம் நடை பெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் அதனைப் பார்வையிட்டார்.

மாலை 5 மணியளவில்- அறிஞர் அண்ணா கலையரங்கத்தில் மாணவச்

செல்வங்களின் கலைநிகழ்ச்சிகளோடு நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ஆர். சத்பதி, விழாவுக்குத் தலைமை யேற்றார். செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மண்டல இணைப்பதிவாளர் திரு. அ. ஜின்னா வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் இயக்குநர் (பிரச்சாரம்) திரு. பொன். சுப்பையா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

நுகர்வோர் கூட்டுறவு கூடுதல் பதி வாளர் திரு. பா. இராம் மோகன்ராவ், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வெ. வரப் பிரசாதராவ், வழக்கறிஞர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்டத்தில் உள்ள 51 கூட்டுறவு அமைப்புகளின் சார்பில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சருக்குக் கைத்தறி ஆடைகள்- சால்வைகள் அணிவிக்கப் பட்டன.

மாவட்டத்தில் புதிதாக அமைய விருக்கும் நான்கு கூட்டுறவுச் சங்கங் களின் புதிய கட்டடங்களுக்கான அடிக் கல்லைத் திறந்து வைத்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் விழாச் சிறப் புரையாற்றினார்.

''புரட்சித்தலைவி தலைமையில் அரசு அமைந்தபின், கூட்டுறவுத் துறையின் பணிகள் மிகவும் மேம்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் உள்ள 23 மாவட்டங் களிலும் கூட்டுறவு வார விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது; தந்தை பெரியார் அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து சிறந்த திருச்சியிலே இதன் தொடக்க விழா நடைபெற்றது; அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மண்ணான காஞ்சியிலே இந்த நிறைவு விழா நடை பெறுகிறது...'' என்று குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள்- ஒரு வார கால கூட்டுறவு வார விழாக்களிலும் தமிழ்நாடு முழுமையும் நடைபெற்ற நற் பணிகளைத் தொகுத்துரைத்தார்.

''நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால், தமிழ்நாடு முழுமைக்குமாக மாபெரும் அளவிலே தொடங்கப் பட்டுள்ள டாக்டர் புரட்சித்தலைவி 15 அம்சக் குழந்தைகள் திட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகை யிலே கூட்டுறவுத் துறையும் தமது பங்கைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே, மாவட்டந்தோறும் அதற்காகப் பத்து அல்லது பதினைந்து படுக்கைகள் கொண்ட மருத்துவமனை- இத்துறை மூலம் அமைக்கப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள் கிறேன்''- என்றும் அவ்விழாவிலே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.



விழா முடிவில்- டைப்பிஸ்ட் கோபு வின் இராஜலட்சுமி தியேட்டர்ஸ் குழுவினரின் நகைச்சுவை நாடகம் நடை பெற்றது.

—பி.எல்.ஆர்.

# பார்த்தோம்-படித்தோம்

**1.11.93** இதழில் 'புரட்சித் தலைவியின் முழக்கம்'- நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சித் தொகுப்பு குறித்த விவரங்களும், படங்களும் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் அருமையாக அமைந்திருந்தது.

''டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்'' படித்தேன். புரட்சித்தலைவியின் ''தாயுள்ளம்'' இத்திட்டம் மூலம் மிளிர் கின்றது.

—சி. வள்ளியம்மாள்,
கன்னியாகுமரி.

மகாராஷ்டிரா பூகம்பம்-நிதி நன் கொடை குறித்த மாண்புமிகு முதல்வர் அவர்களின் படமும், செய்தியும் மிக அருமை. மகாராஷ்டிர-லத்தூர் சகோதர, சகோதரிகளின் துயரைத் துடைத்து நல்வாழ்வு பெற இது மிகவும் உதவும். இந்நிதி, நம் நாட்டின் சகோதரத்துவப் பிணைப்பை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.

—எல். ரவிச்சந்திரன்
நெடிமொழியனூர்.

டாக்டர் மு. வரதராசனார்- பற்றிய கட்டுரை படித்தேன். அவரைப் பற்றிய பல செய்திகளைத் தெரிந்து கொண் டேன், பயனுள்ளதாக இருந்தது.

—டி. செல்வராஜ்
தொழுதூர்.

நவம்பர் இதழ் படித்துச் சுவைத்து மகிழ்ந்தேன். கடலூர் அரசு அருங்காட்சி யகத்தைப் பற்றி, காப்பாட்சியர் ம. காந்தி வழங்கியுள்ள ''அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய செய்திகள்''- என்ற கட்டுரை உண்மையில் எங்களூர் அருங் காட்சியகத்தின் சிறப்புக்களைக் கூறுவ தாக இருந்தது.

—கடல் நாகராசன்,
கடலூர்.

'மாதம் ஒரு மருத்துவர்' வரிசை யில், மனநோய் மருத்துவம் தவிர, இதர மருத்துவர்களைப் பேட்டி கண்டால், மற்ற துறை மருத்துவ முறையை அறிய வாய்ப்பு கிட்டும்.

—டி. திலகவதி,
மைலம்.

கல்வியின் நோக்கம் பற்றிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் உயர்ந்த கருத்து என் இதயத்தில் ஆழப் பதிந்தது. மனம் கனிந்த நன்றி.

—கே. சதானந்தம்,
மழவராயனேந்தல்.



# பாரதியும் பாப்பாப் பாட்டும்

அந்தத் தாய், தன் மகளை அழைத்து ஒரு பொருளை எடுத்து வரும்படி கூறுகிறாள்.

''போம்மா... உனக்கு இதே வேலை!'' என்று அந்தச் சிறுமி விளையாடத் தெருவுக்கு ஓடி விடுகிறாள்.

இதைக் கவனிக்கிறார் தந்தை.

தன் மகளை அன்புடன் அருகை அழைக்கிறார்.

''அம்மா சொன்ன வேலையைச் செய்ய வேண்டியது தானே? ஏன் முடியாது என்று சொன்னாய்?'' என்று செல்லமாக முதுகை வருடியபடியே கேட்டுக் கொண்டே, ''தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே, பாப்பா!'' என்றார்.

மகளும், அப்பாவின் பேச்சைக் கேட்பதாக உறுதி கூறுகிறாள்.

அந்தத் தாய்தான் சிறுமி சகுந்தலாவின் தாய் செல்லம்மாள். அந்தச் சகுந்தலா தான் ஒரு தேசியக் கவிஞனின் மகள்; அந்தத் தேசியக் கவிஞன்தான் சுப்பிரமணிய பாரதி.

ஆம். பாரதி தம் மகளுக்காக எழுதிய பாடல்தான், 'பாப்பாப் பாட்டு'!

அந்தப் பாட்டை அவர் தம் மகளுக்காக எழுதினாலும், அதில் உலகத்துக்கே நீதி சொல்லக்கூடிய கருத்துக்கள் பொதிந்திருப்பதை நாம் உணரலாம்.

64 வரிகளில், நான்கு நான்கு அடிகளாக எழுதி உள்ள இந்தப் பாட்டு, சிறந்த ஒரு குழந்தைப் பாட லாகவும், குழந்தை இலக்கியமாகவும் விளங்குவதை நாம் பார்க்கலாம்.

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தை களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் தயார்ப் படுத்த விரும்பும் பெற்றோர்கள், பெரியோர்கள் இந்தப் பாட்டை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாலே போதும்!

மகாகவி பாரதி பிறந்த நாள்: டிசம்பர்—11

வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை இனிய எளிய சொற்களின் கோவையாக அவை விளங்குகின்றன. குழந்தைகளுக்கு எப்படிச் சொன்னால் புரியும், என்கிற மந்திரச் சக்தி பாரதியாரிடம் இருந்தது. 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'யல்லவா?

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

பாடலின் தொடக்கம் இது. சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்? உடல் நன்றாக இருந்தால்தானே உருப்படியாய்ச் செயல்பட முடியும்? அதற்கு விளை யாட்டு மிகுதித அவசியம் என்பதால், தொடக்கத்திலேயே அந்தக் கருத்தை வைத்தார். அடுத்த அடியில் சண்டை சச்சரவு இல்லாமல் கூடி விளையாட வேண்டும் என் கிறார். அப்படி விளையாடும்போது யாரையும் திட்டாதே என்றும் அன்புடன் கூறுகிறார்.

சிட்டுக்குருவியைப் பார்த்திருக்கிறோம். அது ஒரு இடத்தில் சும்மா இருக்காது. சட்சட்டென்று பறக்கும். அதைப் போலச் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். அத்துடன், அழகிய பறவைகளைப் பார்த்து மனத்தில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். கவலைக்குச்சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது என்பது அவரது அறிவுரை.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!

என்று பிஞ்சு மனத்தில் பதியும்படி எத்தனை அழகாகக் கூறுகிறார்!

குப்பை மேட்டில் கோழிகள் கொத்தித் திரிகின்றன. அவற்றைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்தக் கோழிகளுடன் விளையாடினால் எப்படி இருக்கும்?

கோழி என்றால், குறிப்பாக, குழந்தைகளுக்குக் கொண்டாட்டம் தானே? அதைப் பிடிக்கக் குழந்தைகள் ஓடுவதை நாம் பார்க்க வில்லையா என்ன?

வடையைத் திருடிய காக்கைக் கதைதான் நமக்குத் தெரியுமே! குழந்தை கையில் ஏதாவது பண்டம் வைத்திருந்தால், திடீரென்று பிடுங்கிக் கொண்டு பறந்துவிடும் திருட்டுக் காக்கை அல்லவா அது? பாவம்! அந்தக் காக்கைக்கும் இரக்கப்பட வேண்டும்.

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேண்டும் பாப்பா!

பால் ஒரு பரிபூரண உணவு. அந்தப் பாலைத் தருவது எது? பசு. அந்தப் பசு மிக நல்லதல்லவா? நாய் வீட்டைக் காக்கிறது. வாலைக் குழைத்துத் தம் விசுவாசத்தையும் காட்டுகிறது. இது நமக்குத் தோழனல்லவா? இதோ பாரதியார் பாடுகிறார்.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா! - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

இதேபோல வீட்டுப் பிராணிகளான குதிரை, மாடு, ஆடு ஆகியவற்றையும் நாம் ஆதரிக்க வேண்டும் என்பது பாரதியாரின் கருத்து.

'வைகறைத் துயிலெழு' என்பார்கள். காலையில் எழுந்ததும் படிக்க வேண்டும். அப்போதுதான் படித்தது மனத்தில் பதியும் என்று சொல்லுவார்கள். பிறகு நல்ல பாடல்களைப் படிக்க வேண்டும், பாட வேண்டும். மாலை முழுவதும் விளையாட வேண்டும். காலையில் படிப்பு; மாலையில் விளையாட்டு. இதை வழக்கமாகக் கொள்வது நல்லது.

காலை யெழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு!
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வமக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்றார் வள்ளலார். 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' என்றார் திருவள்ளுவர் பாரதியாரும்,



பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

என்றார். அத்துடன் தெய்வமே நமக்குத் துணை என்றும் கூறுகிறார்.

பாரதியார் மேலும் கூறுகிறார்—

- பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
  பயங்கொள்ள லாகாது பாப்பா!
- துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
  சோர்ந்துவிட லாகாது பாப்பா!
- சோம்பல் மிகக்கெடுதி பாப்பா - தாய்
  சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!

இவ்வாறு குழந்தைகள் நல்லபடியாக வளர - வாழ வழிவகுக்கும் வகையில் அவரது வார்த்தை அமுதம் விளங்குகிறது.

ஆன்றோர்களும் சான்றோர்களும் வாழ்ந்த இந்த நாடு அமிழ்தினும் இனியதாகும். எனவே, இந்த நாட்டைத் தாய் என்று வணங்கிடு என்று மழலைச் செல்வங்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைக்கிறார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். பாரதியும் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றார். அந்தத் தமிழை நாம் 'தொழுது படித்திட வேண்டும்' என்றும் அன்புக் கட்டளை இடுகிறார்.

இமயம் முதல் குமரி வரை யாவரும் ஒன்று என்கிற எண்ணம் மலர வேண்டும் என்பது மாக்கவியின் ஆசை. அந்த ஆசை நிறைவேற நாம் பாடுபடுவோம்.

வேதம் உடையது இந்த நாடு. நல்ல வீரர் பிறந்ததும் இந்த நாடு. இந்த நாட்டை நாம் வணங்கி வழிபட வேண்டும்.

மேலோர் யார்? கீழோர் யார்? சிறியவர் யார்? பெரியவர் யார்? இதற்குத் திருவள்ளுவர்,

செயற்கரிய செய்வார் பெரியோர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்றார். செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர்; அவ்வாறு செய்ய மாட்டாதவர் சிறியோர் என்பது வள்ளுவர் கருத்து.

பாரதியாரும், 'தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!' என்று கூறி, யார் மேலோர் என்பதையும் தெளிவு படுத்துகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்,
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

இதைவிட எளிமையாக - அருமையாக யாரால் சொல்ல முடியும்?

மனிதனிடத்தில் உள்ள உயர்ந்த பண்புகளில் அன்புக்கும் முக்கிய இடமுண்டு. 'அன்பே சிவம்' என்பது ஆன்றோர் வாக்கு. மனிதரிடத்தில் அன்பு செலுத்துவது போல, பிற உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல் வேண்டும். ஆம். மனத்தில் ஈடுமும் வேண்டும்; வீரமும் வேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா!

என்று நீதி நெறிமுறைகளை ஒருமாலையாகக் கோத்துக் கொண்டே போய், பாடலின் முடிவில் 'இதுதான் வாழும் முறை' என்று முத்தாய்ப்பு வைக்கிறார் பாரதி.

பாரதியின் பாப்பாப்பாட்டு, குழந்தை உலகம் குன்றிலிட்ட விளக்காய் ஒளிவிட வழிகோலும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

— பி.வி. கிரி

- 1972 அக்டோபர் 8-ந் தேதி சென்னை கிண்டி ராஜ பவனத்தில் நடைபெற்ற அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் விழாதான், ராஜாஜி இறுதியாகக் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி யாகும்.

- ராஜாஜி மரணம் அடைவதற்கு முன் - நினைவு இழப்பதற்கு முன்பாக, 'இப்போது எப்படி இருக்கிறீர்கள்?' என்று டாக்டர்கள் கேட்டனர். அதற்கு ராஜாஜி, "நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்று பதில் சொன்னார். இதுதான் அவர் பேசிய கடைசி வார்த்தை!





# குறளின் குரல்

— கவிஞர் சாமி பழனியப்பன்

'கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

இது திருக்குறள் 'கடவுள் வணக்கம்' என்னும் முதல் அதிகாரத்தில் வருகிற 9-வது குறட்பா.

எண்குணத்தான் ஆகிய இறைவனின் திருவடிகளை வணங்க வேண்டியதின் இன்றியமையாமையை வலியுறுத்துவது இந்தக் குறட்பா.

''தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதலுடையனவல்ல, எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத் தலைகள்''

என்பது இக்குறட்பாவிற்கு பரிமேலழகர் எழுதிய உரை. அதாவது,

''தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத (கேளாக் காது - காணாக் கண் போல) புலன்கள் பயனற்றாற் போல எட்டுக் குணங்களையுடைய இறைவனின் திருவடிகளை வணங்காத தலைகளும் பயனற்றன'' என்பது.

'கோளிற் பொறியிற் குணமிலவே' என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகருக்கு முன் உரை வகுத்தவராகக் கருதப்பெறும் மணக்குடவர்,

''அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, ஒரு குணமும் உடையவனல்ல; எட்டுக் குணத்தினை உடையவன் திருவடிகளை வணங்காத் தலையினையுடைய உடம்புகள்' என்றார்.

இறைவனின் திருவடிகளை வணங்க வேண்டும் என்பதே எல்லாரது கருத்துமாகும். ஆனால், 'கோளிற் பொறியில் குணமிலவே' என்ற குறட்பாவிற்கு இவைகள்

சரியானவைதாமா? என்பதையே நாம் இங்கு ஆராய வேண்டும்.

புலன் உணர்வுகளைக் கொள்ளாத பொறிகள் பயனற்றன என்னும்போது, அத்தகை பொறிகளையுடைய உடம்பும் பயனற்றதே. அவ்வாறிருக்க, தலையையோ, தாளையோ பிற உறுப்புகளையோ தனித்துக் கூற வேண்டியதில்லை. மேலும் ஐம்புலன்களையும் அடக்கி, மன ஒருமைப்பாட்டோடு இறைவனை வழிபடுதலே முறையும் சிறப்பும் ஆகும். அவ்வாறிருக்க,

'வணங்காத் தலை' என்பதற்கு 'வணங்காத தலைகள்' என்று பொருள் கொள்ளுதல் எவ்வகையில் சிறப்புடையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனி, 'ஈதல் இயையாக் கடை' (கு.200) வறியவர்க்கு ஒன்று வழங்க முடியாத நிலை வந்தபோது; 'ஒண்டொடி கண்ணே' (கு.1101) ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த இவளிடத்தில்; 'உள்ளம் உடைந்துக்கக் கால்' (கு.1270) துன்பத்தைத் தாங்காமல் உள்ளம்; 'வணங்காத் தலை' என்பதற்கு, வணங்காதபோது, என்று பொருள் கொள்ளுவதே சிறப்பாகத் தோன்றுகிறது. அதாவது, தலை என்பது ஏழாம் வேற்றுமையுருபாக நின்றது.

'கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்பதற்கு,

'எண் குணத்தானின் திருவடிகளை வணங்கவில்லையானால், தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றது' என்று பொருள் கூறுவதே சரியாகும்.

இவ்வாறு 'எண்' என்னும் சொல் எண்ணுதல் என்னும் பொருளில் திருக்குறளில் வேறு எங்கேனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா? ஆம்.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல் (கு.910)

என்ற குறட்பாவைக் காட்டலாம். இக்குறட்பாவின் பொருள்:

'நன்கு எண்ணுதல் பொருந்திய (ஆழ்ந்து சிந்திக்கின்ற) உள்ளத்தோடு, தகுந்த நிலையும் வாய்க்கப் பெற்றவர், எக்காலத்தும் மனைவியின் ஏவலுக்கு இணங்கும் பேதைமை புரியார்' என்பது.

இங்கு, எண் எனும் சொல், எண்ணுதல் - சிந்திக்கும் - எண்ணுகின்ற என்ற பொருளில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இனி, 'கோளிற் பொறியில்' என்ற குறட்பாவில் "அன்பர்கள் மனத்தகத்தே என்னும் குணநலன்களை உடையவனின் திருடிவகளை (தத்துவங்களை)-த் தொழவில்லையானால், தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றதே" என்று பொருள் காண்பதே சரி.

"மெய்யுணர்வு பெறுதலே வாழ்வின் பயன் - அம்மெய்யுணர்வைப் பெறவில்லையானால் தத்தமக்குரிய உணர்வுகளைப் பெறாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றதே என்பதாம்.

ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு எய்தாக் கடை' (கு.314)

என்ற குறட்பாவினாலும் இவ்வுண்மையைத் தெளியலாம்.

அடுத்தபடியாக, இக்குறட்பாவில் உள்ள 'எண்குணத்தான்' என்ற சொல்லை ஆராய வேண்டும். எண்குணத்தான் என்பதற்கு,

1. 'தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4. முற்றுமுணர்தல், 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6. பேரருளுடைமை, 7. முடிவிலாற்றலுடைமை, 8. வரம்பிலின்பமுடைமை என எட்டுக் குணங்களையுடைய இறைவன் என்று பொருள் கூறப்படுகிறது.

இந்நிறத்த்ன், இவ்வியல்பினன், இப் பெயரினன் என்று எவராலும் வரையறுத்துக் கூறமுடியாத இறைவனுக்கு நாமே எட்டுக் குணங்களைக் கற்பித்து, அந்தச் சிமிழுக்குள் அவனை அடக்க முயல்வது நியாயமா? குறுகிய நோக்க மன்றோ?



குலமிலான் குணம் குறியிலான்
குறைவிலான் கொடிதாம்
புவியிலான் தனக் கென்னவோர்
பற்றிலான் பொருந்தும்
இலமிலான் மைந்தர் மனையில்
லான் எவன் அவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர
சிவனெனத் தகுமே"

என்றார் தாயுமானார்.

இத்தகைய இறைவனுக்கு எட்டுக் குணங்கள் கற்பித்து, குடும்பம், கூத்தி, மக்கள், மனைவியும், கற்பித்தல் ஏற்புடையதா? ஏற்றம் தேடுவதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, 'எண்குணத்தான்' என்பதற்கு, நாம் மனத்தகத்தே எண்ணுகின்ற குணநலன்களையுடையவன் என்று பொருள்.

இறுதியாக, 'கோளிற் பொறியிலவே' என்னும் குறட்பாவிற்கு,

'மெய்யுணர்வு பெறவில்லையானால், அத்தகைய வாழ்வு, புலன் உணர்வுகளைப் பெறாத பொறிகளைப் போலப் பயனற்றதாம்' என்று பொருள் காண்பதே பொருத்தமும் சிறப்பும் ஆகும்.

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை
## வறுமை ஒழிப்பு மற்றும் வறட்சி நிவாரணத் திட்டங்கள்-1993-94

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வேலைகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 9759 (பயனாளிகள்) | 402.538 |
| 2. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் | 996 (பயனாளிகள்) | 31.700 |
| 3. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் | | |
| | 1. தொகுப்பு வீடுகள் | 876 | 168.192 |
| | 2. பள்ளிக் கட்டடங்கள் | 82 | 98.400 |
| | 3. சத்துணவுக் கூடங்கள் | 16 | 10.720 |
| | 4. பூஞ்சாயத்து அலுவலகக் கட்டடங்கள் | 88 | 76.560 |
| | 5. கசிவு நீர்க் குட்டைகள் | 14 | 21.000 |
| | 6. கோயில் குளங்கள் சீரமைத்தல் | 32 | 21.000 |
| | 7. தார்ச் சாலைகள் | 81 (99 கி.மீ) | 146.520 |
| | 8. செம்மண் சாலைகள் | 7 (21.8. கி.மீ) | 16.380 |
| | 9. ஜீவன்தாரா கிணறுகள் | 388 | 162.960 |
| | 10. பஞ்சாயத்து வேலைகள் | 864 | 369.370 |
| | 11. சமூக நலக்காடுகள் | 11.5 இலட்சம் கன்றுகள் | 38.270 |
| 4. | சாண எரிவாயுத் திட்டம் | 600 | 7.000 |
| 5. | புகையில்லா அடுப்புத் திட்டம் | 7500 | — |
| 6. | ஒருங்கிணைந்த கிராமப்புற எரிசக்தித் திட்டம் | 1980 | 4.030 |
| 7. | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 4349 ஹெக். 260 தடுப்பு அணைகள் 6 கசிவு நீர்குட்டைகள் 6000 ஓடைப் பராமரிப்பு 1 நடமாடும் கால்நடை மருந்தகம் | 97.230 |
| 8. | கட்டட மையத் திட்டம் | 24 | 18.000 |
| | மொத்தம் | 33926 | 1689.870 |

**டாக்டர் கே. சத்யகோபால், இ.ஆ.ப.,**
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை.

**டாக்டர் கிருஷ்ணசாமி ராஜீவன், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை-20

# பொது வேலை நிறுத்தம்



பாரிமுனையில்...



அண்ணாசாலையில்...

69 சதவிகித ஒதுக்கீட்டைத் தமிழ்நாட்டில் தொடர்ந்து அமல் நடத்த வேண்டும் என்று, மத்திய அரசை வற்புறுத்தி தமிழ்நாடு முழுவதும் நவம்பர், 16-ந் தேதி பொது வேலைநிறுத்தம் (பந்த்) நடத்துவது என்று, தமிழகச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி 16.11.93 அன்று, தமிழ்நாட்டில் முழு அடைப்பு, எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் வெற்றிகரமாக நடந்தது.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில், எந்த இடத்திலும் கடைகள் திறக்கப்படவில்லை. கொத்தவால் சாவடி, ஜாம் பஜார் மார்க்கெட்டுகள், மைலாப்பூர் தண்ணீர்தொட்டி மார்க்கெட்டு உள்பட எல்லா முக்கிய மார்க்கெட்டுகளும் அடைக்கப்பட்டிருந்தன.

அன்று காலை 6 மணியளவிலிருந்து, மாலை 6 மணி வரை பேருந்துப் போக்குவரத்து நடக்கவில்லை. பல்லவன் மற்றும் திருவள்ளுவர் பேருந்துகள் டெப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதனால் சாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. இதேபோல், மின்சார இரயில்களும் ஓடவில்லை. மாலை 6 மணிக்குப் பிறகே இரயில்கள் ஓடத் தொடங்கின.

முழு அடைப்பையொட்டி, மாநில அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்துக்கும் விடுமுறை விடப்பட்டிருந்தது.

சென்னைத் துறைமுகத்தில் வேலை நடக்கவில்லை. சென்னை நுங்கம்பாக்கம் சாஸ்திரிபவனிலுள்ள மத்திய அரசு அலுவலகத்தில் சில தொழிலாளர்கள் வேலைக்கு



எழும்பூர் ரயில்நிலையத்தில்...




பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில்...

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றி

***16.11.1993*** அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திற்கு, தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்கி, அமைதி காத்து, இந்தப் பொது வேலை நிறுத்தம் வெற்றி பெறச் செய்த தமிழகத்தின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழக மக்களின் முன்னேற்றம் கருதி, தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்ற உறுதியான, உணர்ச்சிபூர்வமான தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதி பலிக்கும் வகையில் இந்தப் பொது வேலை நிறுத்தம் அமைந்திருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வந்திருந்தனர். இதேபோல அஞ்சல் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

சென்னையில் சென்ட்ரல், எழும்பூர் இரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பம்பாய் மெயில், மங்களூர் மெயில் ஆகிய தொலை தூர இரயில்கள் மாலை 6 மணிக்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வந்தன.

பேருந்து வசதி இல்லாததால், பயணிகளைப் போலீசார் வேனில் ஏற்றி அவரவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர். விமான நேரமும் மாற்றியமைக்கப் பட்டது. அன்றைய பொது வேலைநிறுத்தம் முழு வெற்றி பெற்றுவிட்டது என்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23







